Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 07 செவ்வாய்க்கிழமை (23.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 357

### மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துடன்

## பரீட்சார்த்த புகையிரத சேவை நேற்றைய தினம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

பளையில் இருந்து யாழிற்கான புகையிரத பரீட்சார்த்த சேவையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.


நேற்றுக் காலை 10.00 மணியளவில் பளையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பரீட்சார்த்த சேவை 10.15 மணியளவில் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தினை வந்தடைந்தது.

பளை புகையிரத நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த யாழ்தேவி புகையிரதத்தை அங்கு கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சி

19 ஆம் பக்கம் பார்க்க

## சுயலாப அரசியல்வாதிகளின் நோக்கம் தோற்கடிப்பு

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் நீண்டகாலத் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை, மக்களை திசைதிருப்பும் சுயலாப அரசியல்வாதிகளின் நோக்கம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலையத்தில் நேற்றைய தினம் யாழிற்கான பரீட்சார்த்த சேவையை நிறைவு செய்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழிற்கான ரயில் சேவை ஒக்ரோபர் 13 இல் ஆரம்பம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டுடன் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இந்த நிலையில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் வடபகுதிக்கான ரயில் பாதைகள் புனரமைக்கப்பட்டு பளை வரை ரயில சேவைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். ரயில் நிலையம்

19 ஆம் பக்கம் பார்க்க

# தனிநாடு அமைக்க மாட்டோம் சத்தியம் செய்தது கூட்டமைப்பு

(கொழும்பு)

இலங்கை எல்லைக்குள் தனிநாடு அமைக்கும் நோக்கம் கிடையாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கை தமிழரசுக் கட்சியும் நேற்றைய தினம் உச்சநீதிமன்றில் சத்தியம் செய்தன.

இது தொடர்பில் உச்ச நீதிமன்றிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் சத்தியக் கடதாசி மூலம் அறிவித்துள்ளன.

இலங்கை எல்லைக்குள் தனிநாடு ஒன்றை அமைக்கும் நோக்கம் கிடையாது என தெரிவித்துள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா சத்தியக்கடதாசி மூலம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாத நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருவதாகத் தெரிவித்து ஆறு மனுக்கள் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தனிநாடு ஒன்றை அமைக்கும் நோக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான ரோஹினி மாரசிங்க, சந்திர ஏக்கநாயக்க ஆகியோர் இந்த மனுக்களை விசாரணை செய்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாணசபைத் தேர்தலின் போது வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனிநாட்டு கோரிக்கை தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களான வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை விடயத்தில் மத்தியஸ்தம் தென்னாபிரிக்க அரசிற்கு அனுமதி



இலங்கை விவகாரங்களில் மத்தியஸ்தம் வகிப்பதற்கான அனுமதியை தென்னாபிரிக்க அரசாங்கத்திற்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் மத்தியஸ்த முயற்சிகளுக்கும், இலங்கை உட்பட சில நாடுகளுக்கு விசேட பிரதிநிதிகளை நியமித்தமைக்கும் தனது ஆதரவை வழங்குவர் என ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளர் நாயகம் வெடே மண்டசே தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த யூலை மாதம் அரசின் அழைப்பை ஏற்று

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பிரதமர் மோடியுடன் பேச்சு நடத்துவார் ஜனாதிபதி

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பு அடுத்த ஓரிரு தினங்களில் இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க, தெரிவித்துள்ளார்.

ஐக்கிய


19 ஆம் பக்கம் பார்க்க




## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)








பளையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான பரீட்சார்த்த ரயில் சேவையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து நேற்று ஆரம்பித்து வைத்தனர். இந் நிகழ்வின் காட்சிப் பதிவுகள் சில...


## சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3800)


## தேசிய சுனாமி ஒத்திகை

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் உள்ள பருத்தியடைப்பு ஜே/50, கிராம அலுவலர் பிரிவில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் சுனாமி முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும், ஒத்திகைப்பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

# கிளிநொச்சி நகரசபை விரைவில் உதயமாகும்

## அரச அதிபர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில், கிளிநொச்சி நகர பிரதேசத்தையும் பரந்தன் பிரதேசத்தையும் இணைத்ததாக கிளிநொச்சி நகரசபை, கண்டாவளைப் பிரதேசசபை அமைக்கப்படவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துள் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி என நான்கு பிரதேச செயலகப் பிரிவுகள் இருந்த போதிலும் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி என மூன்று பிரதேச சபைகள் மட்டுமே இயங்கி வருகின்றன.

கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உரிய நிலப்பரப்பு கரைச்சி பிரதேச சபை எனும் தனி ஒரு பிரதேச சபையால் மட்டுமே நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி நகரப் பிரதேசத்தின் துரித வளர்ச்சியை கருத்தில் கொண்டும், கண்டாவளைப் பிரதேச மக்களுக்கு சிறந்த உள்ளூராட்சி சேவை வழங்கும் நோக்குடனும் கிளிநொச்சி நகர சபையும், கண்டாவளைப் பிரதேச சபையும் உருவாக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பரந்தன் நகரப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் யாவும் கரைச்சி பிரதேச சபையினுள் உள்ளடங்குமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொது மக்களும் சமூக அமைப்புக்களும் அபிப்பிராயம் தெரிவிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இவ் அமைப்புக்கள் உருவாக்கம் நிறைவு பெற்றதும் கிளிநொச்சி மாவட்டம் ஒரு நகர சபை, நான்கு பிரதேசசபைகளைக் கொண்டதாக இயங்குமெனவும் தெரிவித்தார். (90)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

**பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்**

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு நவம்பர் 2013 க்கு பின்னர் பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்பில் சித்தியெய்தி எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் இளமாணி பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்து வவுனியா வளாகம், வவுனியா.
3. இணையத்தளம் : www.jfn.ac.lk

விருதுகள் : பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீட மட்டத்தில் ச்கல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்க்ாக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

முடிவுத் திகதி : 30.09.2014

சரியான பொ்ருத்தமான தகவல்களை உள்ளடக்காததும், தெளிவற்றதும், பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பினனர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்** (C/3449)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

**பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்**

பேராசிரியர் க.குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 11.01.2014 இற்குப் பின்னர் பட்டம் பெற்ற தூய. பிரயோக விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகமை : எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம், மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப்பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள் தங்கப்பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவர்.

விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. இணையத்தளம் : www.jfn.ac.lk

முடிவுத் திகதி : 30.09.2014

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும், தெளிவற்றதும், பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படா.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (C/3450)



# கல்விக் கண்காட்சி

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையால் நடத்தப்படும் கல்விக் கண்காட்சி நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிராமச்சந்திரன், மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.திரவியராசா மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இன்றும் இக்கண்காட்சி இடம் பெறவுள்ளது. (18)

# பாதுகாப்பற்ற புங்கன்குளம் ரயில் கடவை கவனமெடுப்பார்களா அதிகாரிகள்?



(யாழ்ப்பாணம்)

பளை - யாழ்ப்பாணம் புகையிரத பாதைகள் புனரமைப்புச் செய்யப்பட்டு புகையிரதக் கடவைகள் போடப்பட்டுள்ளநிலையில் புங்கன்குளம் வீதியில் புகையிரத பாதையை ஊடறுத்துச் செல்லும் வீதிக்கு புகையிரதக் கடவை போடப்படாதுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

24 வருடங்களின் பின்னர் யாழ். தேவி புகையிரம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்தடைந்தது. இந்த ஒத்திகை நிகழ்வின் போது பல மக்கள் ஒன்றுகூடி புகையிரதப் பாதைகளுக்கு அருகில் நின்று பார்வையிட்டனர். அதுமட்டுமன்றி நேற்று இடம் பெற்ற வெள்ளோட்ட நிகழ்வையும் பார்வையிட்ட போதே அங்கிருந்த மக்கள் புங்கன்குளம் ரயில் கடவை போடப்படவில்லை எனவும் இதனால் தாம் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி புங்கன்குளம் புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள சனசமூக நிலையத்தில் பாலர் பாட-சாலை இயங்கிவருவதுடன் தனியார் பாடசாலை ஒன்றும் இயங்கி வருகின்றது. மேலும் இந்த வீதியா-னது எந்நேரமும் மக்கள் நடமாட்டம் நிறைந்த இடமாக காணப்படுவதால் அப்பகுதியில் புகையிரதக் கடவை முக்கியமான ஒன்றாகவே உள்ளது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முக்கிய கவனமெடுத்து புகையிரதத்திலிருந்து மக்களின் உயிர்களைக் காக்க முன்வர வேண்டும் எனவும் புகையிரதக் கடவை அமைக்க முன்வர வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எல், 51)

## விளக்கவுரை

நாட்டில் பெருகி வரும் வாகன விபத்துக்களை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு வாகன சாரதிகளும் பொதுமக்களும் அறிந்து கொள்ள வேண்டிய போக்குவரத்து விதிகள் பற்றிய தெளிவான விளக்கவுரையொன்றை ஓய்வு பெற்ற பிரதிபொலிஸ் மா அதிபர் பேரின்பநாதன் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்வணிகர் கழக பணிமனையில் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வமுடைய அனைத்து வாகன சாரதிகளும் பொதுமக்களும் பங்குபற்றும்படி யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொள்கிறது.

## கலை இலக்கிய பெருவிழா இன்று

(வவுனியா)

வவுனியா மாவட்ட கலை இலக்கிய பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்து கொள்ளவுள்ளார். இதன் போது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## பரிசளிப்பு விழா

தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்கமுன்பள்ளியின் பரிசளிப்பு விழாவும் நுழைவாயில் திறப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பாடசாலை அதிபர் க.காராளசிங்கம் தலைமையில் நடைபெற்றவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய அபிவிருத்தி பிரதி கல்விப்பணிப்பாளர் கி.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் சு.சண்முககுலகுமார், கௌரவிருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர் எல்.விக்கினராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (17)



முதியோர்தினத்தை முன்னிட்டு கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் மாதர் சங்கத்தினர் கைதடி முதியோர் இல்ல வளாகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபடுவதைக் காணலாம்... (51)

# மாவையரே... மாவையரே... வெறும்வாயைச் சப்பிறதுக்கும் ஒரு எல்லையிருக்கு...






**மாவை தமிழ்ச்சமூகத்துக்குத் தேவையா?**

இப்பிடியொரு கேள்வியை இண்டைக்குப் பலரும் கேட்கத் தொடங்கியிருக்கினம்.

ஏனெண்டால், அண்மைய நாட்களில் மாவை பேசிக்கொண்டு திரியிற பேச்சைக் கேட்டால் புத்தியுள்ள எவருக்கும் விசர்தான் பிடிக்கும்.

அந்த அளவுக்குக் கோமாளித்தனமாக பினாத்திக்கொண்டிருக்கிறார் மாவை.

**'போர்த்துகிற பொன்னாடைகள் எல்லாம் போர் ஆடைகளே'** எண்டும் **'இறுதி வெற்றி கிட்டும் வரையில் போராட்டம் ஓயாது'** எண்டும் **'இலக்கை நோக்கி நகரும்வரை தூங்கக்கூடாது'** எண்டும் பெரிய கதையெல்லாம் கதைக்கிறார்.

**'போர்ப்பலத்தோட இருந்த பிரபாகரனே இப்பிடி ஒருக்காலும் பெரிய பிரகடனங்களைச் செய்ததில்லை. வெறுங்கையோட நிக்கிற மாவைக்கு ஏனிந்தப் பொல்லாப்பெல்லாம்'** எண்டு மாவையை ஆதரிச்ச ஆட்களே கேட்கினம்.

வெறும்வாயைச் சப்பிறதுக்கும் ஒரு எல்லையிருக்கு.

நொந்து நூலாகிப்போயிருக்கிற சமூகத்துக்குத் தலைமை தாங்குகிற தலைவர்கள் எப்பிடியிருக்கோணும்.

போரால பாதிக்கப்பட்ட சனங்கள் இன்னும் அந்தப் பாதிப்பில இருந்து மீள முடியாமல் தவிச்சுக்கொண்டிருக்குதுகள்.

தமிழர்களுக்கு ஒரு தீர்வு வேணும். நாடு வேணும். உரிமை வேணும் எண்டு உண்மையாகவே போராடிய போராளிகள் எல்லாம் தெருவில் நிக்கிறார்கள்.

விடுதலைப்போராட்டத்தில உயிரைக் குடுத்த போராளிகளின்ரை குடும்பங்கள் எல்லாம் உரிய நிவாரணமும் இல்லாமல், பிள்ளைகளும் இல்லாமல், விடுதலையும் இல்லாமல் தத்தளிக்குதுகள்.

ஆனால், இந்தச் சனங்களின் வாக்குகளைக் கெஞ்சிக் கேட்டு வாங்கிய மாவை குறாப்போ 'கொமடி' பண்ணி விளையாடிக்கொண்டிருக்குது.

'இறுதி வெற்றி கிட்டும்வரை போராட்டம் ஓயாது' எண்டால்.....

அந்த இறுதி வெற்றி என்ன?

தனிநாடா? சமஸ்டியா? அதிகாரப்பரவலாக்கமா? அதிகாரப்பகிர்வா?

இதைப்பற்றி மாவையும் சொல்லப்போவதில்லை. சனங்களும் கேட்கப்போவதில்லை. மாவையின்ரை கையாட்களுக்கும் தெரியாது. ஆதரவாளர்களும் இதைப்பற்றி யோசிக்கப்போவதில்லை.

எல்லாரும் இந்தக் கொமடியை விளங்காமல கொஞ்ச நாட்களுக்குச் சொல்லிக்கொண்டு திரியப்போகினம். அவ்வளவுதான்.

மாவை சொல்லிற மாதிரியோ, எண்ணுகிற மாதிரியோ காரியங்கள் நடக்கப்போவதில்லை.

**ஏனெண்டால்.... அகிம்சைப் போராட்டம் எண்ட பேரில நடத்தின சத்தியாக்கிரங்களே செல்லாக் காசாகிப் போனது வரலாறு.**

**பிறகு நடத்தின ஆயுதப்போராட்டமும் தோல்வியில் முடிச்சது முழு உண்மை.**

**இப்ப நடக்கிற சர்வதேசத்தின்ரை தலையீடு, சர்வதேச ஆதரவு எண்ட பம்மாத்துகளும் ஒண்டுக்கும் உதவாதவை.**

**இந்தியாவின்ரை செல்வாக்கால தீர்வு கிடைக்கும் எண்டது பகல் கனவு.**

இதையெல்லாம் அனுபவமாகவே அறிஞ்சாப்பிறகும் மாவை இப்பிடி மொக்குத்தனமாகவே கதைக்கிறாரெண்டால்.....

இதை என்னெண்டு சொல்லிறது....?

**மாவையின்ரை கதையை நம்பி எடுபடுகிற ஆட்களை எப்பிடிச் சொல்லிறது....?**

இறுதி இலக்குவரை போராட்டம் ஓயாது எண்டால், அந்தப் போராட்டத்தை எப்பிடி நடத்திறது? ஆர் நடத்திறது? அதால வாற லாப நட்டங்களுக்கு ஆரெல்லாம் முகம் குடுக்கிறது?

இதாலதான் மாவையின்ரை இந்தப் பேக்கதையைக் கேட்ட ஆட்கள் **'மாவை தமிழர்களுக்குத் தேவையா?'** எண்டு கேட்க வெளிக்கிட்டிருக்கினம்.

மாவையோ நடைமுறை யதார்த்தத்தைப் பற்றியே சிந்திக்காத ஒரு பாரம்பரியத்தில இருந்து வந்த ஆள்.

அவர் அப்பிடித்தான் கதைப்பார்.

அப்பிடிக் கதைச்சுத்தான் அவர் கட்சியின்ரை தலைமைப்பதவிக்கு வந்தவர். அப்பிடிக் கதைச்சுத்தான் அவர் அரசியல்ல ஐம்பது வருசமாகக் கஞ்சி காய்ச்சி ஊத்திக் கொண்டிருக்கிறார். மன்னிக்கோணும். ஐம்பது வருசமாக அவர் புரியாணி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

திண்டு கண்டவன் மற்றவையை அண்ட விட மாட்டானாம்.

இது அப்பிடியே அச்சொட்டாக மாவைக்குப் பொருந்துது.

மாவைக்கு இது பொருந்தலாம். மக்களுக்குப் பொருந்துமா?

மாவை எங்களுக்குத் தேவையா எண்டெல்லவா சனங்கள் கேட்குதுகள்....

மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய கடலுக்கு சமனானது - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நல்லதை நோக்கி நடப்போம்!

"தம்முடைய கலாசாரத்தின் சிறப்புகளையும், தம்முடைய வரலாற்றின் வெற்றிகளையும் பேசி ஆரவாரம் செய்வது அறிவுஜீவிகளின் வேலையாக இருக்க முடியாது" என்று குறிப்பிடுகிறார் பிரபல பலஸ்தீன அறிஞரான எட்வேர்ட் ஸெய்த்.

தேசியக் கருத்தியல்களில் ஊறி எளிமையான ஆத்திரங்களுக்கு எடுபட்டு, விமர்சன உணர்வை இழப்பதும் உணர்ச்சியடிப் படையிலான பொதுநீரோட்டக் கருத்துகளுக்கு 'ஆமாம்' போடுவதும் அவர்தம் இயல்பல்ல என்கிறார் அவர்.

பொதுமக்களிடத்தில் புரையோடியிருக்கும் மாயையான கருத்துக்களை உடைத்து, அவர்களுக்குக் கசப்பானதாக இருப்பதெனினும் உண்மைநிலையை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது புத்திஜீவிகளின் முதன்மைப்பணி என்கிறார். இதன்போது மக்களால் வெறுக்கப்பட நேர்ந்தாலும் உண்மையைச் சொல்ல வேண்டிய துணிச்சல் அவர்களுக்கு இருக்க வேண்டும் என்கிறார்.

நீதிக்கும் சமத்துவத்துக்கும் கௌரவத்துக்குமான போராட்டம் என்பது இன்றைய சிக்கல்களையும் யதார்த்த நிலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டதாகவே வடிவமைக்கப்பட வேண்டும். வெறும் உணர்ச்சிவசப்பட்ட விருப்பங்களை விசிறியடித்தபடியே இந்த சிக்கல்களைக் கடந்துவிட முடியாது.

தேசபக்தி ஆவேசங்களை அள்ளி விசிறி, இன்று மக்களைக் கஷ்டப்பட வைத்துக் கொண்டிருப்பவர்களும், அவற்றுக்கெல்லாம் எதிர்காலத்துக்கான ஒரு 'விடுதலை நியாயத்'தைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களும், தாங்கள் மக்களை ஏமாற்றவில்லை என்பதில் மனசாட்சிக்கு உண்மையாக இருக்கிறோமா என்பதைத் திரும்பவும் ஒருமுறை கேட்டுப்பார்த்துக் கொள்ள வேண்டும்.

எந்த நம்பிக்கையில் மக்களைத் தொடர்ந்து கஷ்டப்பட வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தமக்குள்ளாகவேனும் பலமுறை விசாரித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

ஏதோ புதையல் கண்டுபிடிப்பது போல புதிது புதிதாய்க் குற்றங்களைக் கண்டுபிடித்து அடுக்குவதன் மூலம், அரசியல் தேவைக்கும் அவரவர் காட்ட விரும்பும் 'மனிதாபிமான – முற்போக்கு முகத்தின்' தேவைக்கும் பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர, சேர வேண்டிய இடத்திற்கு சமூகத்தை அழைத்துச் சென்றுவிட முடியாது.

தங்களது ரோசத்திற்கும், எதிர்பார்ப்புகளுக்கும், வீம்புகளுக்கும் ஏற்ப மட்டுமே தீர்வு வரவேண்டும் என்று அழுத்தமான பிடிப்போடு இருப்பவர்கள், அந்த லட்சியம் தவிர வேறெதுவும் முக்கியமல்ல என்று நினைக்கின்றவர்கள் அடிப்படையில் சுயநலவாதிகள்தான்.

அரசை விடாமல் திட்டியபடியே இருந்தால், யாராவது வந்து நம் பிரச்சினைகள் எல்லாவற்றையும் சரிசெய்து விட்டுப் போவார்கள் என்று சில அரசியல்வாதிகள் வாக்குகளுக்காக ஏமாற்றிக் கொண்டிருப்பது போல, சமூகத்தின் சிந்திக்கும் தரப்பும் கையாலாகாத்தனக் காத்திருப்பிற்குத் தூண்டக் கூடாது.

இந்த நாட்டையும் மக்களையும் மேலும் பாழ்படுத்தாது, காப்பாற்றுவதிலும் முன்னேற்றுவதிலும் அக்கறை இருக்கக் கூடிய அனைத்துத் தரப்பினரும் இறங்கி, செயற்படும் தளத்தில் சந்தித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது.

எல்லோரும் இதுவரை சென்ற பாதைகளிலிருந்து திரும்பி வந்து, நம் அனைவரினதும் எதிர்காலத்திற்காக நாம் இணைந்து செல்ல வேண்டிய புதுப் பாதையைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டிய வாய்ப்பை மீண்டுமொரு தரம் தவற விடுவதும் மீண்டும் மீண்டும் வருத்தப்படுவதுமாகத் தொடர வேண்டாம்.

பழைய முரண்களைப் பேசிப் பேசியும், பழைய ஆவேசங்களைக் கைவிடாமலும் பகைவெறுப்பை வளர்த்து போலி விடுதலை நம்பிக்கைகளை ஊட்ட வேண்டாம்.

சொல்லொணாப் பாடுகள் அனைத்தும் பட்டு, நொந்து அல்லலுறும் அப்பாவி மக்களின் பேரால் அவற்றை மறந்துவிடுவதற்கு ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.

- ஆசிரியர்

# ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குகள் வீணடிக்கப்படாது

## – விமல் வீரவன்ச தெரிவிப்பு –

ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் வாக்குகளை அநாவசியமாக பயன்படுத்தமாடடார்கள். மேற்கத்திய நாடுகள் இரண்டாவது விருப்புவாக்குகளை எண்ணி தோற்கடிக்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எனினும் அவ்வாறு செய்ய தாம் இடமளிக்கப் போவதில்லை என நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஊடகத் துறை மற்றும் தகவல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இம்முறை நடைபெற்ற ஊவா மாகாண தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றுள்ளது. சஜித், ரணில் ஆகியோர் வறட்சியை துருப்புச் சீட்டாக பயன்படுத்த முயன்றனர். பதுளையில் வென்றார்களா? இல்லையே.

29 முறை தோற்ற ஐ.தே.க. சற்று அதிகமாக வாக்குகளைப் பெற்றவுடன் சந்தோச போதையில் உள்ளது. மக்கள் விடுதலை முன்னணி தெற்கிலும் மேற்கிலும் காட்டிய செயற்பாட்டை ஊவாவில் காட்டவில்லை. அவர்கள் வெற்றி பெற்ற ஆசனங்கள் 10 வருடங்களுக்கு முன்னரும் அவர்களுக்கிருந்தது.

இந்த அனைத்து தேர்தல்களையும் ஒன்றாக்கிப் பார்க்க வேண்டும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்குகளை தவறாக பயன்படுத்த மாட்டார்கள். தேசிய சுதந்திர முன்னணி கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது திருகோணமலையில் போட்டியிட்டு 9522 வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. அதாவது 0.51 வீதமாகும்.

பதுளையில் எமது கட்சியில் பிரபலமான ஒருவர் இருக்கவில்லை. அதனால் 5000 வாக்குகளை பெறமுடிந்தது. 2015ஆம் ஆண்டு ஆகும் போது எமது கட்சிக்கு 6 வயது. எனினும் மக்கள் விடுதலை முன்னணிக்கு 50 வயது. அப்படிப்பார்க்கையில் எமது கட்சியை இன்னும் வளர்க்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் சந்தோசமாக இருப்பதாக காட்டிக்கொள்கிறது. தோற்ற பின்னர் இவ்வாறு சந்தோசமாக இருப்பது மிகவும் நல்லது. தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் பெரிய ராஜபக்ஷவுக்கு முதல சிறிய ராஜபக்ஷவை தோற்கடித்து காட்டுமாறு கூறியது. கூட்டு அரசாங்கம் ஒன்றை உருவாக்கப்போவதாக ஐ.தே.க. கூறியது. ஹரீனுக்கு பதுளையில் வெல்ல முடியாமல் போய் விட்டது.

தாம் பெரும் சக்தி என மக்கள விடுதலை முன்னணி கூறியது. இரண்டு ஆசனங்களை மட்டுமே அவர்களால் பெறமுடிந்தது. ஆனால் அரசாங்கம் வெல்வோம் என்று கூறியது. அதே போல் வென்று காட்டியது என்று கூறினார்.

# அநீதி இழைக்கிறது அரசு குற்றம்சாட்டுகிறார் மேர்வின்

அரசாங்கம் தனக்கு தொடர்ச்சியாக அநீதி இழைத்துக் கொண்டிருப்பதாக பொது மக்கள் நல்லுறவு அமைச்சர் மேர்வின் சில்வா பரபரப்புக் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக எனக்கு அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றது.

நானும் எவ்வளவு காலத்துக்குத்தான் பொறுமையாக இருக்க முடியும்? மிக விரைவில் நான் இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

ஜனாதிபதி மிகவும் நல்லவர், அவர் எனக்கு எந்தவித அநீதியும் இழைக்கவில்லை, அவரைச சுற்றியுள்ளவர்கள் தான் என்னை சீண்டிப் பார்க்கின்றார்கள். எனது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்று தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின் ஐ.தே.க. தொடர்பில் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள வரவேற்பு காரணமாக ஆளுங்கட்சி மிக விரைவில அதிகாரத்தை இழக்கும் நிலையை நோக்கி பயணிக்கின்றது.

இதனை மனதில் கொண்டு ஐ.தே.க.விற்கு தாவும் மனோ நிலைக்கு அமைச்சர் மேர்வின் தள்ளப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### பால்மா விளம்பரங்களுக்கு தற்காலிக தடைவிதிப்பு

பால்மா வகைகளை ஊடகங்களில் விளம்பரப்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பால் மா உற்பத்தி மற்றும் விநியோக் நிறுவனங்களுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. பால் மா உற்பத்தி செய்யும் சில நிறுவனங்களால் ஊடகங்களில் வெளியிடப்பட்ட விளம்பரங்கள் மூலம் பொதுமக்களிடையே தவறான கருத்துக்கள் தோன்றியுள்ளன.

இதன் விளைவாக பால் மா தொடர்புடைய விளம்பரங்களை ஊடகங்களில் வெளியிடுவது குறித்த கொள்கையை மறுபரிசீலனை செய்ய சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது. எனவே அந்த காலப்பகுதிவரை ஊடகங்களில் விளம்பரம் செய்வதை நிறுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# மாலைதீவு ஜனாதிபதியை சந்தித்தார் சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை, மாலைதீவு ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முகமாக மாலைதீவு ஜனாதிபதி அப்துல் லாஹ் யமீன் அப்துல்லாஹ் கையூம் தலைமையிலான குழுவினர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அப்துல் லாஹ் யமீன் அப்துல்லாஹ் கையூம் தலைமையிலான குழுவினர், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை சினமன் கிரேண்ட் ஹோட்டலில் சந்தித்தனர்.

இரு நாடுகளுக்கிடையிலான சுகாதார சேவை மற்றும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் சுதந்திர சுகாதார சேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மாலைதீவு ஜனாதிபதி செயலகத்தின் சார்பில் மொஹமட் ஹுசைன் ஷெரீப், இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் ஸஹியா ஸரீப் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தலைமைத்துவ பேரவையிலிருந்து விலகினார் திஸ்ஸ அத்தநாயக்க

ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவையிலுள்ள தன் பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

இவர் தனது இராஜினாமாக் கடிதத்தை தலைமைத்துவ சபையின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருஜயசூரிய மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இவர், நீண்ட காலமாக கட்சியின் பொதுச் செயலாளராக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருந்தார்.

தமது அரசியல் வாழ்வில், தொன்று தொட்டு ஐக்கிய தேசியக் கட்சியோடு இருந்த பேரவை அங்கத்தவர்களின் எண்ணிக்கையை, இவருடைய இராஜினாமா குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள கபீர் ஹாசிம் மற்றும் ருவான் விஜேவர்தனவை தவிர மற்றைய அனைவரும் வேறு கட்சிகளில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தவர்களாவர்.

இதேவேளை இவருடைய இராஜினாமாக் கடிதத்தை இவ்விருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நிர்வாக சேவை பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்

இலங்கை பரீட்சைத் திணைக் களத்தினால் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டு பரீட்சைகள் தொடர் பான சகல விடயங்களும். உள்ளடங்கலாக அக்கறை யுள்ள பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப் பரீட்சை இரண்டு விதமாக நடாத்தப்படும் ஒரு பரீட்சை திறந்த போட்டிப் பரீட்சையென்றும் மற்றைய பரீட்சை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையென்றும் பிரிக்கப்பட்டுள்ளது. இரு பரீட்சைகளிலும் சில வினாத் தாள்கள் பொதுவானவை அவையாரவன பொது விவே- கம், இலங்கையின் சமூக அரசியல் பொருளாதார மற்றும் உலகப்போக்குகள் என்பனவாகும். பொதுவா- னவை என்பது இரு பகுதி யினரும் அதே பரீட்சை வினாவுக்கு தோற்றுவது என்பது பொருளல்ல. திறந்த போட்டிப்பரீட்சை செப்ரெம்பர் மாதம் 27, 28ஆம் திகதிகளி லும் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக அட்டவணைப்படுத்தியுள்ளது. ஆகையால் மட்டுப்படுத்தப் பட்ட பரீட்சை ஒக்ரோபர் நடுப்பகுதியிலோ அல்லது மாத இறுதியிலோ நடை பெறக்கூடும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

நிர்வாக போட்டிப்பரீட்சைகளில் வடபகுதியிலிருந்து மிகக் குறைவானவர்களே சித்தி யடைந்துள்ளார்கள். என்பது முன்னர் நடைபெற்ற பல பரீட்சைகளிலிருந்து நிரூபணமாகியுள்ளது. தமிழர்களை புறக்கணிப்பு செய்வதாக பலவிதமான கருத்துக்கள் ஊடகங்கள் உட்பட பல மையங்களில் விவாதிக்கப்படுகின்றது. ஆனால் இவை உண்மைக்குப் புறம்பானவை

க.பொ.த சாதாரண பரீட்சை க.பொ.த உயர்தரப்பரீட்சை வேறு அரசாங்க போட்டிப் பரீட்சைகள் (முகாமைத்துவ உதவியாளர் நியமனம், கிராம உத்தியோகத்தர் நியமனம் போன்றவை) தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத்தன்மை எந்தவித மான கேள்விக்கோ விமர் சனத்திற்கோ பொதுவாக உட்படுத்தப்படவில்லை "உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போரடலாம்..." என்ற கவிஞரின் பாடல்வரி கள் அக்கறையுள்ள பரீட் சார்த்திகளுக்கு துண்டு கோலாக அமையும். தமிழ்ப்பரீட்சார்த்திகள் சித்தியடையாமைக்கான பிர- தானமான காரணங்கள்

அ) பரீட்சார்த்திகளின் கடுமை யான முயற்சியின்மை

ஆ) இலங்கை நிர்வாக சேவை பரீட்சையின் உள்ளடக்கம் ஆழம்,அகலம் பற்றிய தெளிவின்மை

இ) தகுதிவாய்ந்த விரி வுரையாளர்களுக்கான பற்றாக்குறை அல்லது இல்லாமை

ஈ) ஒழுங்குபடுத்தப்பட்ட கற்பிக்கும் நிறுவனங் களுக்கான பற்றாக்குறை

உ) விண்ணப்பித்தவர்களும், பரீட் சைக்கான பிரவேச அட்டை கிடைத்த பின்னரே குறிப்புக்கள், புத்தகங் களுக்காக அலைந்து திரியும்நிலை.

ஊ) பரீட்சார்த்திகளுக்கு போதிய வழிகாட்டல்கள் கிடைக்காமை

பரீட்சார்த்திகள் இந்த உண்மைகளை புரியாதவரைக்கும் இப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

மேற்கூறிய பிரச்சினைகளை இனம் கண்டபடியாலும் நிர்வாக சேவை யைப் போன்ற கடினமான ஒரு போட்டிப்பரீட்சையாகிய இலங்கை வெளிநாட்டுச் சேவை பரீட்சையில் சித்தியடைந்து அவ் உத்தியோகத்தின் பலன்களை அனுபவித்து ஓய்வு நிலையில் இருப்பதனால் ஏனைய- வரும் எமது பிரதேசத்திலிருந்து இப் பரீட்சைக்குத்தோற்றி சித்தியடைய் வேண்டும். என்ற ஆதங்கத்தில் இத் தொடர் கட்டுரையை வரைகின்றேன்.

இதனுடைய பாட பரீட்சைகள் வினாக்கள் தொடர்பாக கூறும்பொழுது திறந்த போட்டி பரீட்சைக்கு பொது விவேகம் ஒன்றரை மணித்தியாலம், சமூக பொருளாதார அரசியல் பின்னணி மற்றும் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலமும் சர்வதேசப் போக்குகள் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலமும், முகாமைத்துவ விவேகம் மூன்று மணித்தியாலம் ஆக்கபூர்வ பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலமும் திறந்த போட்டி பரீட்சைக்கு 5 பாடங்கள் தயாரிக்க வேண்டி உள்ளது. பொது விவேகம் மட்டும் ஒன்றரை மணித்தி யாலங்கள் இந்தப்பரீட்சை பற்றிக் கூறும் பொழுது பொதுவிவேகம் என்பது எதை கற்கவேண்டும் என்பதில் தேர்வுநாடிகளுக்கு சிக்கல் இருக்கும் என தெரியவில்லை சரியான முறையில் கற்பதாக தோன்றுகின்றது. ஆனால் ஏனைய பாடங்களை படிப்பதில் பெரும் சிக்கல் இருக்கின்றது. ஏனென்றால் இலங்கையின் அரசியல் பொருளா- தார விடயங்கள் என்பதும் மற்றும் விடயங்கள் என்பதும் குறித்த ஒரு பாடத்துடன் மட்டுப்படுத்தப்படாதது சகல பாடங்களையும் குறிப்பதாக அது அமைகின்றது. ஆகவே இதில் நாங்கள் அரசியல் அமைப்பு பற்றி படிக்கவேண்டும் சிறுவர் துஷ்பிரயோகம் படிக்கத்தான் வேண்டும் பூகோள வெப்பமாதல் தாக்கங்கள் தொடர்பாக படிக்க வேண்டும் அண்மையில் நடைபெற்ற வறட்சி, வெள்ளப்பெருக்கு பற்றியும் படிக்கவேண்டும் இவ்வாறு பலவித மான அரசியல் பொருளாதார சமூக நீதிமன்ற விடயங்கள் சட்டவாக்கம் அரசியல் அமைப்பு அரசியல மைப்பு திருத்தங்கள் நோய்கள் விளையாட்டுக்கள் என்று சகல விடயங்களையும் நாங்கள் படிக்க வேண்டும் அத்துடன் அடுத்தபாடம் சர்வதேச போக்குகள் தொடர்பாக கதைக்கும் போது ஐ.நா. சபை எமது கண் முன் தோன்ற வேண்டும். ஐ.நா சபையின் அமைப்பு அதன் முகவர் அமைப்புக்கள் யு.என்.எச். சி.ஆர். மனித உரிமை ஆணைக்குழு போன்ற பலவிதமான ஐ.நா நிறு வனங்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகள் என்ன? அதே போன்று வேறு சர்வதேச நிறுவனங்கள் காமன்வெல்த், கூட்டுச்சேரா இயக்கம், சார்க், பிறிக்ஸ், ஏசியான், நேட்டோ, வார்சோ, போன்ற பலவிதமான சர்வதேச அமைப்புக்கள், பிராந்திய அமைப்புக்கள் பற்றி முதலில் தெரிந்திருக்கவேண்டும்.

அடுத்ததாக இன்று உலகில் நடைபெறும் விடயங்கள் அரசியல் விடயங்கள், ஈராக் பிரச்சினை, ஆப்கான்பிரச்சினை, சூடான் பிரச்சினை, இப்பொழுது அண்மையில் தாய்லாந்தில் நடை பெற்ற இராணுவப் புரட்சி அத்துடன் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக்கள் போன்ற விடயங்கள் அரசியல் விடயங்களுக்குள் உட்படு கின்றன. சர்வதேச போக்குகள் என்பது தனியே அரசியலை மட்டும் உள்ளடக்க வில்லை. அதில் நான் முன்னர் கூறியதுபோன்று பூகோளவெப்பமால், பூகோளமயமாதல், பொருளாதார ரீதியாக பார்க்கும் போது 2008, 2009 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவி பிணை எடுப்பது போன்ற நிகழ்வு களும் நடைபெற்றுள்ளது. அதனுடைய தாக்கங்கள் அத்துடன் சர்வதேச வர்த்தகம் இவ்வாறான பொருளாதாரம் தொடர்பான பலவிதமான தொடர்பு கள் குறிப்பாக உலக வர்த்தக மையம் அதன் விடயம் என்ன, அதன் அமைப்பு எவ்வாறானது அவற்றின் நோக்கங்கள் என்ன அதே போன்று உலகவங்கி, ஆசியவங்கி, ஆசியஅபிவிருத்தி வங்கி போன்ற பலவற்றையும் நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வினாக்களில் அனைத்துக்கும் விடையளிக்கப்பட வேண்டும். அத்துடன் இலங்கை வெளிநாட்டு சேவை வினாத்தாளை எடுத்துக்கொண்டால் அவற்றில் 5 பாடங்கள் என நினைக்கின்றேன். அங்கு பொதுவிவேகம் தவிர ஏனை யவை கட்டுரை வினாக்கள் ஒவ்வொரு வினாத்தாளும் பத்து அல்லது பதி னொரு வினாக்கள் இருக்கும் ஐந்து சிட்டுரை வினாக்களோ சுருக்க வினாக் களோ இல்லை, விடையளிப்பது சிறிது இலகுவானது ஆனால் நிர்வாக சேவைக்கான பரீட்சையில் நாம் பல விடயங்களை அறிந்து விடையளிக்க வேண்டும். உதாரண- மாக இலங்கையை பொறுத்தவரையில். வெளிநாட்டு நேரடி முதலீடுகள், மத்தியவங்கி அறிக்கைகள், வறுமை ஒழிப்புத்திட்டங்கள், இலங்கையில் சுற்றுலாத்துறை எவ்வாறு உள்ளது வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையரால் நாட்டிற்கு ஏற்படும் பொருளாதார நன்மைகள் என்ன? சமூகப்பிரச்சினைகள் என்ன? சென் மதிநிலுவைகளை ஈடுசெய்வதற்கு எவ்வாறு இவை பயன்படுகின்றன. போன்ற பல விடயங்களையும் படிக்கவேண்டும். உலக கால்பந்து போட்டி எங்கு நடைபெற்றது. அடுத்த போட்டி எங்கு நடைபெறும். உலக கிறிக்கட்போட்டி எங்கு நடைபெறவுள்ளது. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஆசிய விளையாட்டுப்போட்டிகள் தொடர்பான விபரங்களும் அறிந்திருக்கவேண்டும். அத்துடன் நோய்கள் தொடர்பாக அறிந்திருத்தல் வேண்டும் உதாரண மாக எபோலா, நோயானது ஆபிரிக்காவில் ஏற்பட்டது பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது அது தொடர்பாக அறிந்திருக்க வேண்டும் விமானக்கடத்தல்கள், போன்ற விபரங்கள் என பல விடயங்களை அறிந்துகொண்டே இப் பரீட்சைக்கு செல்லவேண்டும். அவ்வாறின்றி பரீட்சைக்கு சென்று பின்னர் எம்மை தெரிவுசெய்ய வில்லை என கூறுவது பொருத்த மற்றதாக இருக்கும்.

அடுத்ததாக முகாமைத்துவ விவே- கம், அது முகாமைத்துவத்துடன் தொடர்புடையது, திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், வழிநடத்தல், போன்ற முகாமைத் துவ செயற்பாடுகளை நாம் அறிந் திருத்தல் வேண்டும் இது 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும். இது தனி யான ஒரு பாடமாகும். முகாமைத் துவம் தொடர்பாக பேராசிரியர் தேவராஜா அவர்கள் எழுதிய புத்தகங்கள் உள்ளன. இவற்றை புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும். முகாமைத்துவம் தொடர்பான புத்தகங்களை வாசிக்க வேண்டும்.

அடுத்ததாக ஆக்கபூர்வ பகுப் பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள், இது முன்னர் கிரகித் தல் என்ற வினாத்தாளினை அதே வினாத்தாள்களை சிறிது மாற்றம் செய்யப்பட்டதாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

கொழும்பில் சிங்கள மற்றும் தமிழ்மொழி மூலமான பயிற்சி வகுப்புக்களை நடாத்தும் எனது நண்பர்களை தொடர்புகொண்டு கேட்டபோது அவர்களும் இதனை உறுதிசெய்துள்ளனர். ஆக்கபூர்வ பகுப்பாய்வும் தொடர்பாடல் திற னும் என்ற விடயங்கள் முன்னர் கூறியது போன்று கிரகித்தல் வினாப் பத்திரத்தில் வியாக்கியாணம் கொடுத் தல், சுருக்கெழுத்து போன்ற வினாக் களாக அமையும் இது தனியே தமிழ்மொழியை மட்டும் அளவிடுவதாக இல்லாமல் பல துறைகளை சார்ந்ததாகவும் இருக்கும்.

இதில் முகாமைத்துவம், சட்டம் போன்றவை சம்பந்தப்பட்டதாக இருக்கும் இலங்கையில் நடை முறையில் உள்ள சட்டங்கள் தொடர்பில் அறிந்திருக்க வேண்டும் எவ்வாறு சட்டம் இயற்றப் படுகின்றது சமூக வியல், பொரு ளாதாரம் அரசியல் விளையாட்டு போன்ற சகல துறைகளையும் உள்ளடக்கியே இக் கட்டுரை வினா அமையும். எனவே நாம் இந்த பரீட் சைகளை எளிதாக எண்ணுவதோ கூடாது.

திறந்த போட்டிப் பரீட்சை இம் மாதம் 28ஆம் திகதிஆரம்பிக்க வுள்ளது. காலம் நெருங்கி வந்துள் ளது மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு ஒரு மாதம் வரை செல்லலாம்.

**ஏ. தர்மகுலசிங்கம்**
இளைப்பாறிய பணிப்பாளர்,
இலங்கை வெளிவிவகார அமைச்சு

# குடும்பவாதம், இனவாதம் தொடர்ந்தால் அரசின் வீழ்ச்சியைத் தடுக்கமுடியாது

## கலாநிதி தயான் ஜயதிலக தெரிவிப்பு



(கொழும்பு)

குடும்பவாதம், இனவாதம் மற்றும் யுத்தவாதக் கொள்கைகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்தால் வீழ்ச்சியைத் தடுக்க முடியாது என பிரான்ஸிற்கான முன்னாள் தூதுவரும் சிரேஸ்ட ராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தல் முடிவுகளைக்கவனத்திற் கொளளும் போது அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற வாக்குகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஊவா மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள போதிலும், தார்மீக ரீதியில் ஆளும ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் மூன்று தடவைகள் தோல்வி, வட மாகாணசபைத் தேர்தல்களின தோல்வி தற்போது ஊவா மாகாணசபைத் தேர்தல்களிலும் ஆளும் கட்சி பின்னடைவை எதிர் நோக்கி யுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த மக்கள் பெருமபான்மையாக வாழும் பிரதேசங்களில் அரசாங்கம் பின்னடைவை எதிர்நோக்காத போதிலும், வாக்குகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை எதிர்நோக்கி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் உரிய கொள்கைகளைப் பின்பற்றி நாட்டை வழிநடத்தாமையே அரசாங்கம் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்நோக்குவதற்கான பிரதான ஏதுவெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவரகளும், அவர்களது ஆதரவாளர்களும் நன்மைகளை அனுபவித்து வருவதனால் நாட்டின் ஏனைய மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த சர்வாதிகார நடைமுறைகளினால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# பொலிஸ் பொது மக்களிடையே களுத்துறையில் மோதல்

(கொழும்பு)

களுத்துறை மாவட்டம் கட்டுக்குருந்த பிரதேசத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுக்குச் செல்லும் வழியில் வழிபாட்டுக்காக கிறிஸ்தவ திருவுருவச் சொரூபம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போது ஏற்பட்ட குழப்ப நிலைமைகளைத் தொடர்ந்தே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் உள்ளூர் கிறிஸ்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அருகில் கூடியிருந்த சிங்கள ராவய உள்ளிட்ட பௌத்த அமைப்புகளைச் சேர்ந்த பிக்குகள் பொலிஸாரிடம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுமாறு கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊவா மாகாணசபைக்கு நான்கு தமிழர் தெரிவு

(கொழும்பு)

நடந்து முடிந்த ஊவா மாகாணசபைத் தேர்தல் பெறுபேறுகளின் படி, பதுளை மாவட்டத்திலிருந்து 4 தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து செந்தில் தொண்டமான்( 31,858 வாக்குகள்), ஆறுமுகம் கணேசமூர்த்தி (19,262 வாக்குகள்) வடிவேல் சுரேஸ் (21,967 வாக்குகள்) மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வேலாயுதம் ருத்ரதீபன்(30,457 வாக்குகள்) ஆகியோரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# நீதிபதிகள் நியமனத்தில் சட்டவிதி மீறல்கள்

## சுட்டிக்காட்டுகிறது சட்டத்தரணிகள் சங்கம்



(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் நியமிக்கப்படும் போது அனுமதி பெற வேண்டிய் நபர்கள் தொடர்பில் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நீதிபதிகள் நியமிக்கப்படும் போது சட்டமா அதிபர், பிரதம நீதியரசர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் இது குறித்து கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படும் போது தரப்படுத்தல் தொடர்பில் மூன்று சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேர்தல் விதி மீறல்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

PAFFREL
PEOPLE'S ACTION FOR FREE AND FAIR ELECTIONS

(கொழும்பு)

அரசாங்கம் கடுமையான தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டதாக 'பவ்ரல்' என்னும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பெரும்பான்மையான வேட்பாளர்கள் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததுடன், தேர்தல் சட்டங்களை கடுமையாக மீறினர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரசாங்க வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அரச பணியாளர்கள் திட்டமிட்ட வகையில் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

மொனகராகல் மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் போர்வையில் தேர்தல் பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். குறிப்பாக வறட்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் 2500 ரூபா நிவாரணம் வழங்கப்பட்டதாகவும், மொனராகலை விடவும் அதிகள வில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தில் தேர்தல் விதி மீறல்களைத் தடுக்க பொலிஸார் முயற்சித்த போதிலும், மொனராகல் மாவட்டத்தில் அதனை காணக்கிடைக்கவில்லை என ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டவர்களுக்கு புதிய வீசா நடைமுறை



(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கு வீசா வழங்கும் போது தற்போது பாவனையில் உள்ள உத்தியோகபூர்வ முத்திரைக்கு பதிலாக புதிய பாதுகாப்பு ஸ்டிக்கரை பயன்படுத்துவதற்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்பொருட்டு அவ்வாறான ஸ்டிக்கர்களை அச்சிடுவதற்கு, தற்போது அரசாங்கம் அச்சகக்கூட்டுத்தாபனத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அச்சகத்தின் முத்திராதிபதி லலித் டி சில்வா தெரிவித்தார்.

இந்தப்புதிய நடைமுறையின் கீழ் வெளிநாட்டவர்களுக்கு முற்னேற்றகரமானதும் முழுமையான பாதுகாப்பானதுமான வீசாவை பெற்றுக்கொடுக்க முடியும் என குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

# வறட்சியைக்கூட எதிர்க்கட்சியினர் சரியாக பயன்படுத்தவில்லை

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களைக் கூட எதிர்க்கட்சிகள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளத் தவறியுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். ஊவா மாகாணசபைத் தேர்தல் வெற்றி தொடர்பில் கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்ட ஐக்கிய தேசியக் கட்சி கடினமான முயற்சி எடுத்துக்கொண்ட போதிலும் வெற்றியீட்ட முடியவில்லை எனஅவர் குறிப்பிட்டுள்ளார். ஊவா மாகாணத்தில் நிலவி வந்த வறட்சியான காலநிலையைக் கூட எதிர்க்கட்சிகளினால் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட இரு மாவட்டங்களினதும் விவசாயிகள் தொடர்ந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே தேர்தல்களில் வெற்றியீட்ட முடிந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களை ஏமாற்றுவதற்கு நினைத்த எதிர்க்கட்சிகளுக்கு தக்க பாடம் புகட்டப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 50 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கை பல்கலைக்கழகங்களில் கல்வி வாய்ப்பு



இலங்கையை உயர்கல்வித் துறையில் சிறந்த கேந்திர நிலையமாக அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டில் 50,000 வெளிநாட்டு மாணவர்களை இலங்கை பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ள உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் உள்ளூர் பல்கலைக்கழகங்களில் 300 மாணவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது. இத்தொகை தற்சமயம் மூவாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டில் வெளிநாட்டு மாணவர்கள் 10,000பேரை பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ள அமைச்சு திட்டமிட்டுள்ளது.


இதன்படி, 2020ஆம் ஆண்டில் வெளிநாட்டு மாணவர்கள் 50,000 பேருக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படும். உள்ளூர் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களைச்சேர்த்துக் கொள்வதன் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணியும் அதிகளவு கிடைப்பதாக அமைச்சு மேலும் நம்பிக்கை தெரிவிக்கின்றது.




இலக்கிய சமூக வட்டத்தின் ஏற்பாட்டில் (அவை) காலநதியின் ‘கற்குழிவு’ எனும் சிறுகதை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் அல்வாய் கலையகத்தில் நடைபெற்ற போது... (48)

# நுகர்வோரை கவர்ந்து செயற்படுவதால் வியாபார நடவடிக்கைகளை அதிகரிக்கலாம்

## வடமாகாண கூட்டுறவு அமைச்சர் திருவாகரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்வதுடன் நுகர்வோரைக் கவர்ந்து அனுசரிப்பதால் வியாபார நடவடிக்கையை மேலும் அதிகரிக்க முடியும் என வடமாகாண கூட்டுறவு உள்ளூராட்சி சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 92 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கூட்டுறவுத்துறை சரிந்து செல்வதற்கு யாரும் இடமளிக்கக் கூடாது. அதை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும். மக்களைக் கவரும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படவேண்டும்.. அதன் மூலம் சங்கங்கள் தமது வருமானத்தை அதிகரிக்க முடியும். கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்களில் அதன் முகாமையாளர்கள் நுகர்வோரைக் கவரக் கூடியவராகச் செயற்படவேண்டும். அத்துடன் அந்தக் கிளை நிலையத்தில் சகல விதமான பொருட்களும் காட்சிப்படுத்தவேண்டும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குச் சங்கங்கள் முழுமையான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். குறிப்பாக இளைய சமூகத்தினர் கூட்டுறவுத்துறையில் அதிகமாக இணைக்கப்பட வேண்டும். கடந்த அசாதாரண சூழ்நிலையின் போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு ஆற்றிய சேவையை யாரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. இந்தச் சங்கங்கள் மூலம் மக்கள் அதிக பயனைப் பெற்றுக்கொண்டனர்.

அந்தக் காலப் பகுதியில் சங்கங்களில் வியாபார நடவடிக்கைகள் கூடுதலாகக் காணப்பட்டன. இதனால் சங்கங்கள் அதிகலாபம் ஈட்டிச் செயற்பட்டன. சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் படிவங்களை கையாளுதல் போன்றவற்றை நவீன முறைக்குள் இலகுபடுத்துவதற்கான திட்டம் ஒன்றும் கையாளப்படவுள்ளது. இந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதன் மூலம் கூட்டுறவுச் சங்க நடவடிக்கையை இலகுபடுத்துவதுடன் கூட்டுறவாளர்களும் அதிக நன்மையடைவார்கள் - என்றார். (48)

# வலிகாமம் கல்வி வலயத்தில் சிறந்த அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி வலிகாமம் கல்விவலயப் பிரிவில் வலய மட்டத்தில் சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள். இந்நிகழ்வில் கௌரவிப்பதற்காக வலயமட்டத்தில் சிறந்த அதிபர்கள் மற்றும் சிறந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

இவ்வலயப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் 1 ஏபி, 1 சி வகை 2 மற்றும் 3 வகைப்பாடசாலைகளில் இருந்து தலா நான்கு அதிபர்கள் வீதம் மொத்தமாக 16 சிறந்த அதிபர்களும், உயர் தரப்பிரிவில் இருபது ஆசிரியர்களும் இடைநிலைப் பிரிவு மற்றும் ஆரம்பப்பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளில் இருந்து நாற்பது ஆசிரியர்கள் வீதம் மொத்தமாக 100 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

2013 ஜனவரி முதல் 2013 டிசம்பர் வரை பாடசாலைகளில் கடமையாற்றிய அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து சிறந்த அதிபர் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இச் சிறந்த அதிபர் மற்றும் ஆசிரியர் தெரிவுக்கு விண்ணப்பம் வலயக் கல்வி அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

# முரசின் இன்றைய பலன்




(23.09.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 07 ஆம் திகதி.
சதுர்த்தி - திதி. சித்தாமிர்தம்.
பூர நட்சத்திரம் பி.ப. 04.38 வரை. பின் உத்தரம்.
இராகு காலம 03.02 - 04.32 வரை. சுபநேரம 10.32 - 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பயணம் மற்றும் தொழிலை முன்னிட்டு குடும்பப்பிரிவு. ஏற்படலாம், தேடிச் சென்றவர் பற்றிய தகவல் கிட்டாமையினால் மனக்கவலை வாட்டல். |
| ரிஷபம் | காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதைப்போல தேடிவரும அதிர்ஷ்டத்தைப் பற்றிப்பிடியுங்கள், பாக்லைற் எரியவிடாமையினால் விபத்து ஏற்படும் அபாய முண்டாகலாம். |
| மிதுனம் | புகைப்பரிசோதனை மேற்கொண்டவேளை சித்தி இன்மையால் கவலை ஏற்படல், பிள்ளைகளின் செயற்பாடுகளை எண்ணிப்பெருமைப்படல். |
| கடகம் | விவாகம் நிறைவேற கிரகசாந்திகள் செய்ய ஆலயத்தை நாடுதல், விரும்பிய இடத்திற்கு அரச நியமனம் கிடைத்ததை எண்ணி மகிழ்வடைதல். |
| சிம்மம் | சுபகாரியம் நடாத்த பணமுடை காரணமாக நிகழ்வினை ஒத்திவைத்தல், மத்திய கிழக்கு நாட்டினைக் கைவிட்டு ஐரோப்பிய நாடுசெல்ல முயற்சி எடுத்தல். |
| கன்னி | தேங்கிய பொருட்களை அதிரடி விலைக் கழிவு மூலம் விற்பனை செய்ய முயற்சித்தல். |
| துலாம் | உணவுக்கட்டுப்பாட்டினை மேற்கொள்ளாமையினால் மீண்டும் நீரிழிவின் தாக்கம் தோன்றுதல், உற்பத்திச் செலவு கூடி பாரிய நஷ்டத்தை ஏற்படுத்துவதினால் பதகளிப்படைதல். |
| விருச்சிகம் | ஏழரைச்சனி இருந்தாலும் வியாழசுகத்தினால் பயணத்தில் நம்பிக்கை ஏற்படல், வீசா மற்றும் குடியுரிமை இன்மையால் வெளியூரைக் கைவிட ஆதங்கப்படல். |
| தனுசு | ஏற்பு ஊசி உரிய நேரத்தில் ஏற்றாமையினால் நோயின் தாக்கம் அச்சப்படவைத்தல், பொறுப்பின்றிப்பணம் கொடுப்பதை தடுத்த மனையாளுடன் முரண்படுதல். |
| மகரம் | விவாகமின்றி இருக்கும் முதிர் கன்னிகளை நினைத்து கவலையுறல், அவசரத்தினால் ஆவணங்களை எடுத்துச் செல்லாமை காரிய சித்தியைத் தராதுவிடல். |
| கும்பம் | நிறபோதத்தைக் காரணம் காட்டி விவாகம் கைவிடல் முலாம் பூசிய நகையைச் சந்தேகப்பட்டதால் பணம் கொடுக்க பின்வாங்குதல். |
| மீனம் | காரியத்தை ஒத்திவைக்காமல் உடனுக்குடன் மேற்கொள்ளுங்கள், பிதாவின் கருணையால் புதிய முயற்சிக்கு பணங்கிடைத்தல். |

# வியாகுலமாத தேவாலயம் வெற்றிலைக் கேணியில் திறப்பு



(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி வியாகுல மாதா தேவாலயம் 8.5 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடத்தொகுதி கட்டப்பட்டு தாளையடி பங்குத்தந்தை ஜேசுரட்னம் அடிகளாரால் கட்டடம் கடந்த சனிக்கிழமை மாலை திறந்துவைக்கப்பட்டது.

வியாகுல மாதாவின் திருச்சொருபம் எடுத்து வரப்பட்டு சமய அனுஷ்டானங்கள் செய்து பின்பு தாளையடி பங்குத் தந்தை ஜேசுரட்னம் அடிகளாரால் கட்டடம் நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆசீர்வதிக்கப்பட்டு மாதாவின் சொருபம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தாளையடி பங்குத்தந்தை உதவி பங்குத்தந்தை ரமேஸ் ஆகியோர் திருப்பலி ஒப்புக் கொடுத்தலில் பங்குபற்றினார். இவ்வாலயம் 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்டு 1991 இல் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சேதமாக்கப்பட்டு 2002 இல் மீள் குடியேறியபோது புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற வேளையில் 2004 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் மீண்டும் அழிவுற்றதோடு பின்பு தற்போதைய சூழலில் 8.5 இலட்சம் ரூபாவில் புனரமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.மேலும் இவ்வாலயம் இந்துமத சகோதரர் ஒருவரால் புனரமைக்கப்பட்டமை விசேட அம்சமாகும். (63)

# முதியோர் தினத்தை முன்னிட்டு ம.உ.ஆணைக்குழுவின் செயலமர்வு

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முதியோரது உரிமைகள் பாதுகாத்தல், மேம்படுத்தல் தொடர்பாக பிராந்தியங்கள் தோறும் பல செயலமர்வு நடாத்தப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம், அரச, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், முதியோர் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் (விசேடமாக முதியோரது நலன் பேணுவதில் அதிகம் பங்கு வகிப்பவர்கள்) ஆகியோரை உள்ளடக்கிய அரைநாள் செயலமர்வு நடைபெறவுள்ளது.

## சவாலான தொடர்

(லண்டன்)

இலங்கை அணியுடனான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் மிகுந்த சவால் நிறைந்தாக இருக்கும் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் எதிர்வரும் நவம்பர் மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே குக் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மண்ணில் அந்த அணியைத் தோற்கடிப்பது கடினம் என்பது எங்களுக்குத் தெரியும். இலங்கையுடனான தொடரிற்கு போதிய அவகாசம் உள்ளதால் அதற்கு ஏற்றவாறு தயாராகி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிப்போம். அத்துடன் எதிர்வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு சிறந்த பயிற்சிக் களமாக இது அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலகக் கிண்ணத் தொடரில் மலிங்க பங்கேற்பார்

(கொழும்பு)

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்குள் மலிங்க உடற்தகுதியைப் பெற்று விடுவார். உலகக் கிண்ணத் கிரிக்கெட் தொடரில் மலிங்க விளையாடுவார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என இலங்கை அணியின் தேர்வுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இடது கணுக்காலில் சத்திர சிகிச்சை செய்து கொள்வதற்கான அவுஸ்ரேலிய சென்றுள்ள இலங்கை அணியின்வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க எதிர்வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் விளையாடுவது கேள்விகுறியாகியுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சனத் ஜெயசூரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு முன் கூடிய மலிங்க சுகம் பெற்று திரும்புவது முக்கியமானதாகும். நிச்சயமாக இலங்கைக்கான வாய்ப்பில் அவர் முக்கிய வீரராக கருதப்படுகிறார். நியூசிலாந்துக்கு எதிரான ஒரு சில ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அவர் விளையாடுவார் என நாம் எதிர்பார்க்கிறோம். உலகக் கிண்ணத்திற்கு முன்னர் உடல் தகுதியை பெற அது முக்கியமான தொடராக அமையும் என்று நான் நம்புகின்றேன் எனவும் சனத் ஜெயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஒரு சில வாரங்களாக பந்துவீச ஓடும்போது மலிங்க தனது இடதுகால் கணுக்காலில் அதிக வலியை உணர்ந்து வருகிறார். இந்த உபாதை அறிகுறிகளை அவர் எதிர்ப்பூசி மூலம் மட்டுப்படுத்தி வருகிறார். எனினும் கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி தொடக்கம் இந்த எதிர்ப்பூசி வலியை போக்குவதில் போதுமாக செயற்படவில்லை. இந்த நிலையில் அவர் சம்பியன்ஸ் லீக் ருவெண்ரி-20 தொடரில் தனிப்பட்ட முறையில் முன்னுரிமை கொடுத்தே விளையாடினார் என்று இலங்கை கிரிக்கெட் செயற்பாட்டு முகாமையாளர் கால்டன் பெர்னான்டஸ் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்ரேலியா சென்றிருக்கும் மலிங்க அங்கு மருத்துவர் டேவிட் யங்கிடம் ஆலோசனை பெறவுள்ளார். முன்னர் மலிங்கவின் வலது முழங்காலில் ஏற்பட்ட காயத்திற்கும் யங்கிடமே அவர் சிகிச்சை பெற்றார். இந்த காயமே அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வ்பெறக் காரணமாக இருந்தது.

# ஓய்வு முடிவால் கவலையில்லை



ஓய்வு முடிவால் நான் எவ்வித வருத்தமும் கொள்ளவில்லை. சரியான நேரத்திலேயே ஓய்வை அறிவித்ததாக உணர்கின்றேன் என சீனாவின் ரென்னிஸ் மங்கை லிநா தெரிவித்துள்ளார். ஒற்றையர் பிரிவில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ஒரே ஆசியரான சீன ரென்னிஸ் வீராங்கனை 32 வயதான லிநா ஓய்வு பெறுவதாக சில தினங்களுக்கு முன்பு பேஸ்புக் வாயிலாக அறிவித்தார். கால் முட்டியில் தொடர்ச்சியான காயத்தால் அவதிப்பட்டதால் வேறு வழியின்றி ரென்னிஸில் இருந்து விடைபெறுவதாக கூறினார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பீஜிங்கில் செய்தியாளர்களை சந்தித்த அவுஸ்ரேலிய ஓப்பன் சம்பியான லிநா, ஓய்வு குறித்து பேசிய போது உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டு அழுதார். அப்போது அவர் கூறுகையில், எனது ரென்னிஸ் வாழ்க்கையை நினைத்து மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன். ரென்னிஸை விட்டு விலக இதுவே சரியான நேரமாகும். இதனால் எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை. ஓய்வு முடிவை எடுத்த பின்னர் எனக்குள் பலமுறை, எதிர்காலத்தில் இதனால் வருத்தப்படுவேனா என்று கேட்டுப்பார்த்தேன். இல்லை என்றே எனது மனச்சாட்சி பதில் சொன்னது. நான் களத்தில் எப்போதும் மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவே முயற்சித்தேன். எனவே ஒரு போதும் வருத்தப் படமாட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வட்சன் விலகல்

(சிட்னி)

பாகிஸ்தான் அணியுடனான கிரிக்கெட் தொடரிலிருந்து அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் வட்சன் விலகியுள்ளார். பாகிஸ்தான், அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அண்மையில் அறிவிக்கப்பட்டது. கெண்டைக்கால் தசையில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இந்தத் தொடரிலிருந்து விலகுவதாக வட்சன் அறிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக வட்சன் தொடர்ச்சியான உபாதைகள் காரணமாக விளையாட முடியாமல் தவித்து வருகின்றார். இதன் காரணமாக உலகக் கிண்ண அணியில் இடம்பெற முடியுமா என்ற சந்தேகம் உருவாகியுள்ளது. உலகக்கிண்ண தொடருக்கான அணியை தயார் செய்வதில் உபாதைகள் காரணமாக அவுஸ்ரேலியா அணி பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது. அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் ஏற்கனவே இந்தத் தொடரில் விளையாடுவது சந்தேகம் என்ற நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வென்றது ஹோபர்ட் ஹரிகேன்ஸ், கொல்கத்தா


(ஹைதராபாத்)

சம்பியன்ஸ் லீக் ருவெண்ரி-20 கிரிக்கெட் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் ஹோபர்ட் ஹரிகேன்ஸ் மற்றும் கொல்கத்தா அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

ஆறாவது சம்பியன் லீக் ருவெண்ரி-20 கிரிக்கெட் தொடரில் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் ஹைதராபாத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் கேப் கோப்ராஸ் அணியும் ஹோப்ர்ட் ஹரிகேன்ஸ் அணியும் மோதின.

முதலில் ஆடிய கேப் கோப்ராஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. ரிச்சர்ட் லெவி 42, டேன் விலாஸ் 25, ரொபின் பீற்றர்சன் 25, பிலாண்டர் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு 185 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹரிகேன்ஸ் அணி 19 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டங்க் 54, எய்டன் பிளிஸார்ட் 78 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதேவேளை, மற்றுமொறு போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (இந்தியா), லாகூர் லயன்ஸ் (பாகிஸ் தான்) அணிகள் மோதின. முதலில் ஆடிய லாகூர் அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அகமட் ஷேசாத் 59, உமர் அக்மல் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன் ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



பதிலுக்கு 152 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா அணி 19.3 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் உத்தப்பா 46, கம்பீர் 60 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக சுனில் நரைன் தெரிவு செய்யப்பட்டார்.

CHAMPIONS LEAGUE TWENTY 20

## இன்றைய ஆட்டம்

ஹோபர்ட் ஹரிகேன்ஸ் எதிர் நொதேன்


இடம் : ராய்ப்பூர்

நேரம் : இரவு 8 மணி

# பதக்கப் பட்டியல்

தென் கொரியாவின் இன்ச்சான் நகரில் 17ஆவது ஆசிய விளையாட்டு விழா நடைபெற்று வருகின்றது. இதில் பதக்கப் பட்டியலில் முன்னணியில் உள்ள நாடுகளின் விபரம் வருமாறு:

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 13 | 09 | 11 | 33 |
| தென் கொரியா | 12 | 11 | 10 | 33 |
| ஜப்பான் | 07 | 08 | 11 | 26 |
| மங்கோலியா | 02 | 02 | 04 | 08 |
| கஜகஸ்தான் | 02 | 01 | 05 | 08 |
| வடகொரியா | 02 | 00 | 03 | 05 |
| வியட்னாம் | 01 | 02 | 04 | 07 |
| மலேசியா | 01 | 01 | 00 | 02 |
| இந்தியா | 01 | 00 | 03 | 04 |
| இந்தோனேசியா | 00 | 02 | 01 | 03 |
| குவைத் | 00 | 02 | 00 | 02 |
| லெபனான் | 00 | 01 | 00 | 01 |
| துர்க்மெனிஸ்தான் | 00 | 01 | 00 | 01 |
| சிங்கப்பூர் | 00 | 00 | 03 | 03 |
| உஸ்பெகிஸ்தான் | 00 | 00 | 02 | 02 |



# 15ஆவது கிண்ணம்

(டோக்கியோ)

பான்பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், சேர்பியாவின் அனா இவானோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் கரோலின் வோஸ்னியாக்கியுடன் (டென்மார்க்) நேற்று முன்தினம் மோதிய இவானோவிச் 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை எளிதாகக் கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் வோஸ்னியாக்கி கடும் நெருக்கடி கொடுத்ததால், ஆட்டம் டை பிரேக்கர் வரை இழுபறியாக நீடித்தது. ஒரு மணி, 39 நிமிடம் நடந்த இப்போட்டியில் இவானோவிச் 6-2, 7-6 (7-2) என்ற நேர் செட்களில் வென்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். நடப்பு சீசனில் தனது 4ஆவது டபுள்யு.டி.ஏ பட்டத்தை வென்றுள்ள அவர், ஒற்றையர் பிரிவில் பெறும் 15ஆவது சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட பெருவிளையாட்டு 3ஆம் கட்டம் இன்று ஆரம்பம்


(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டியின் மூன்றாம் கட்டம் இன்றைய தினம் கொழும்பு மற்றும் நுகேகொடா போன்ற மைதானங்களில் நடைபெறவுள்ளது.

வயது அடிப்படையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வுகளில் கால்பந்து, குத்துச் சண்டை, எறிபந்து போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஆண், பெண்களுக்கான கால்பந்துப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை வெள்ளவத்தை சுர் மைதானம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, குணசிங்க மைதானம் ஆகிய மைதானங்களிலும், ஆண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கிலும், ஆண், பெண்களுக்கான எறி பந்துப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை கொழும்பு சீவலி மத்திய மகாவித்தியாலயத்திலும், ஆண், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டம் இன்று முதல் நாளை மறுதினம் வரை கல்கிசை சென். தோமஸ் உள்ளக விளையாட்டு அரங்கிலும், ஆண், பெண்களுக்கான பட்மின்ரன் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை கல்கிசை சென். தோமஸ் உள்ளக விளையாட்டு அரங்கிலும், ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை நுகேகொட சென். ஜோசப் ஆண்கள் கல்லூரியிலும், ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டம் இன்று முதல் நாளை மறுதினம் வரை நாத்தாண்டியா மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும், ஆண், பெண்களுக்கான ரென்னிஸ் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை கொழும்பு ரென்னிஸ் சம்மேளன மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, ஏற்கனவே நடைபெற்ற இரு கட்டப்போட்டிகளிலும் வடமாகாண வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டு பல பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)



ஐக்கிய அரசு இராஜ்ஜியம், இலங்கை கராத்தே சம்மேளனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தே போட்டியில் சென்சே. விஜயராஜ் காட்டா மற்றும் குமித்தே போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியில் விஜயராஜுக்கு முதலிடத்தைப் பிடித்தமைக்கான பதக்கங்கள் அணிவிப்பதைக் காணலாம். (எஸ்.பி.)

# டர்வின், ஜெனோஷன் பொறுப்பாட்டம் இறுதிக்கு முன்னேறியது சென்றலைட்ஸ்

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு யாழ். சென்றலைட்ஸ் அணி முன்னேறியுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இப்போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் யாழ். சென்றலைட்ஸ் அணியும், பற்றீசியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி ஜெனோசன், ஜெரிக் துசாந் ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் வேகமாகப் பறிகொடுத்தது. நிறைவில் பற்றீசியன்ஸ் அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மனோஜ் 26, விதுபாலா 38, குகநேசன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜெனோஷன் 25 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, ஜெரிக் துசாந் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 141 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி முதல் ஆறு விக்கெட்டுக்களையும் சொற்ப ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த டர்வின் ஜெனோஷன் இணைப்பொறுப்புடன் ஆடி அணியின் வெற்றியை உறுதி செய்தது. இந்த ஜோடி ஏழாவது விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு முனையில் பொறுப்புடன் இறுதி வரை ஆடிய ஜெனோஷன் அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் சென்றலைட்ஸ் அணி 24.3 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டர்வின் 46, ஜெனோஷன் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விதுபாலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவ்வெற்றியின் மூலம் சென்றலைட்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதேவேளை, நேற்று முன்தினம் காலை நடைபெறவிருந்த முதலாவது அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மானிப்பாய் பரிஷ் அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் மானிப்பாய் பரிஷ் அணி சமூகமளிக்காத காரணத்தினால் கொக்குவில் கே.சி.சி.சி. அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் கே.சி.சி.சி. அணியும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி., 12)

# சைக்கிள் ஓட்டம்; விஜயராசா, வனஜா முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண சைக்கிள் ஓட்டப் போட்டியில் பி. விஜயராசா மற்றும் பி. வனஜா ஆகியோர் முதலிடங்களைப் பிடித்துள்ளனர். யாழ். மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகி மீண்டும் அதே இடத்தில் நிறைவடைந்தது.

ஆண்களுக்ககான 20 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. விஜயராஜா முதலாமிடத்தையும், தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி. சசிகுமார் இரண்டாமிடத்தையும், மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த எஸ். சதீஸ்வரன் மூன்றாமிடத்தையும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. ராஜ் நான்காமிடத்தையும், தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். வசீகரன் ஐந்தாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

பெண்களுக்கான 10 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் நெடுந்தீவு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. வனஜா முதலாமிடத்தையும், இதே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. பாமினி இரண்டாமிடத்தையும், வேலணைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். குந்தவி மூன்றாமிடத்தையும், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி. சசிதா மற்றும் கே. மகிமா ஆகியோர் நான்காம், ஐந்தாமிடங்களையும் பிடித்துக் கொண்டனர். (எஸ்.பி.)

# போராடி மடிந்தது யாழ். மத்தி



(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களால் தோல்வியைத் தழுவியது.

அகில இலங்கை பாடசாலைகள் பங்குபற்றிய இப்போட்டித் தொடரில் 142இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கு கொண்டன. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு யாழ். மத்திய கல்லூரி மற்றும் கல்முனை சாஹிரா கல்லூரி அணிகள் தகுதி பெற்றிருந்தன. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாஹிரா கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி நயாட் மௌலனா, எம்.ஜே.எம். அப்ரி ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் பொறுப்புடன் ஆகிய கிருபாகரன் அரைச்சதம் அடித்து அசத்தியதுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார்.

இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 48.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருபாகரன் 95 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 50, கப்டன் அலன்ராஜ் 50 பந்துகளை எதிர்கொண்டு ஒரு பவுண்டரி அடங்கலாக 21, திரேசன் 18, கௌதமன் 17, கார்த்தீபன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நாயட் மௌலனா 14 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, எம்.ஜே.எம். அப்ரி 38 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நில்லயில் களமிறங்கிய கல்முறை சாஹிரா கல்லூரி அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்து தடுமாறியது.

இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த நயாட் மௌலனா, ஆர்.எம்.றிலா ஜோடி பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக , 59 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது.

தொடர்ந்து சிறப்பாக ஆடிய மௌலனா மத்திய கல்லூரி அணியின் பந்துவீச்சாளர்களின் பந்துகளை சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களை வேகமாகக் குவித்ததுடன் அணியின் வெற்றியையும் உறுதி செய்தார். நிறைவில் கல்முனை சாஹிரா கல்லூரி அணி 41.2 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆர்.எம். றிலா 72 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் அடங்கலாக 55, நயாட் மௌலனா 84 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 58, அப்ரி 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனுஷன், கௌதமன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் கல்முனை சாஹிராக் கல்லூரி அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக மௌலனா தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டிக்கு சிங்கர் நிறுவனம் அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.42)

# முதல் போட்டியில் ஸ்ரார் ஈகிழ் வெற்றி

(மன்னார்)

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் ஸ்ரார் ஈகிழ் அணி பத்து விக்கெட்டுக்களால் பெரு வெற்றிபெற்றது.

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான பத்து ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

9 அணிகள் கலந்து கொள்ளும் இச்சுற்றுப் போட்டி 3 பிரிவுகளாக இடம் பெறவுள்ளது. முதல் சுற்று லீக் முறையிலும், இரண்டாவது சுற்று விலகல் முறையில் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் முதல் போட்டியில் ஸ்ரார் ஈகிழ் அணியும் மன்னார் சித்தி விநாயகர் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சித்திவிநாயகர் அணி 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 101 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரார் ஈகிழ் அளி 6.1 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது.

# வயலின் 35 லட்சம் டொலர்; வசூல் 32 டொலர்!



– ராமன் ராஜா –

இசையைப் புரிந்து கொள்வதிலும் அனுபவிப்பதிலும் சுற்றுப்புறச் சூழ்நிலை - context - என்பதன் பங்கு என்ன என்பது பற்றி வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை ஒரு சுவாரசியமான ஆராய்ச்சி நடத்தியது.

அமெரிக்கத் தலைநகரில் ஒரு பிஸியான சப்வே ரயில் நிலையம். காலை எட்டு மணி. ஒவ்வொரு ரயில் வந்து நிற்கும்போதும் தேன் கூட்டைக் கிளறி விட்டது போல் மக்கள் உதிர்ந்து கலைந்து விரைந்து கொண்டிருக்கிறார்கள். எஸ்கலேட்டர் முடியும் இடத்தில் குப்பைத் தொட்டிக்குப் பக்கத்தில் இளைஞர் ஒருவர் நின்று கொண்டு அருமையாக வயலின் வாசித்துக் கொண்டிருக்கிறார். அவர் எதிரே சில டொலர் நோட்டுகள், சில்லறைக் காசுகள். இரண்டொருவர் போகிற போக்கில் ஒரு காசை வீசிவிட்டுப் போகிறார்கள். கர்ணாமிருதமான இசை. ஆனால் நின்று கவனிக்கவோ, கேட்டு ரசிக்கவோ அங்கே யாருக்கும் நேரமில்லை.

இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது - ரயில்வே ஸ்டேஷன் பிச்சைக்காரர்களை யாராவது நின்று ரசிப்பார்களா என்கிறீர்களா? அன்று வயலின் வாசித்தவர் யாரோ பிச்சைக்காரர் அல்ல! உலகத்தின் மிகச் சிறந்த இசைக் கலைஞர்களில் ஒருவரான ஜோஷ்வா பெல்!

ஸிம்∴பனி ஹோலில் அவருடைய இசை நிகழ்ச்சி நடந்தால் டிக்கெட் விலை குறைந்தது நூறு டொலர். அதுவும் நிற்க இடமில்லாமல் ஹவுஸ் ∴புல்! வெறி பிடித்த ரசிகர் பட்டாளமே அவருக்கு உண்டு. ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் போனால் முடி மன்னர்களெல்லாம் கூப்பிட்டு வைத்து மரியாதை செய்வார்கள்.

இந்த மாதிரி ரயில்வே ஸ்டேஷனில் அவரை யாருமறியாமல் கச்சேரி செய்ய வைத்தது, வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்த பாதி குறும்பு, பாதி சீரியஸான பரிசோதனை. தினசரிக் கடமைகளில் அலுவலக அவசரத்தில் பரபரத்துக் கொண்டிருப்பவர்கள், எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத சூழ்நிலையில் உலகத் தரமான இசையைச் சந்தித்தால் அதை அடையாளம் கண்டு கொள்வார்களா? நம் கலையை ரசிப்பதில் context என்பதன் பங்கு என்ன?

அன்றைக்கு ஜோஷ்வா வாசித்தது, நூற்றாண்டுகளாக இருந்து வரும், காலத்தால் அழியாத கிருதிகள். பாக், ஷுபர்ட், மாஸ்ஸனெட். அவர் கையில் இருந்த வயலின், 1713இல் புகழ் பெற்ற இத்தாலிய வயலின் தயாரிப்புக் கலைஞர் ஸ்ட்ரோட்தன் கைப்படத் தயாரித்தது. விலை 35 லட்சம் டொலர்.

அந்த முக்கால் மணி நேரத்தில் ஆயிரம் பேருக்கு மேல் ஜோஷ்வாவைத் தாண்டிச் செல்கிறார்கள். வெள்ளையர்கள், கறுப்பர்கள். ஆசியர்கள். இளைஞர்கள், முதியவர்கள். இன, நிற, வயது வித்தியாசமில்லாமல் அத்தனை பேரும் அந்த அருமையான இசை அருவியுனூடே புகுந்து எதுவுமே நடக்காததுபோல், எதுவுமே கேட்காதது போல் போய்க்கொண்டே இருக்கிறார்கள். ஐபாட் வைத்திருக்கும் சிலர் இரண்டு காதிலும் இயர்போன் அடைத்துக் கொண்டு நடக்கிறார்கள்; டப்பாவில் அடைக்கப்பட்ட டிஜிட்டல் ஓசைகளில் கரைந்து தம் கண்ணெதிரே நடக்கும் வித்தியாசமான உயிர்க் கச்சேரியை முழுவதும் புறக்கணிக்கிறார்கள்.

நின்று கவனிக்க விரும்பியவை குழந்தைகள் மட்டும்தான். அவர்களை அவசரப் பெற்றோர்கள் தரதரவென்று இழுத்துப் போக, அவை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போகின்றன. ஒரு சிலர் அந்த மாபெரும் இசைக் கலைஞனின் எதிரே சில்லறைக் காசுகளை வீசிவிட்டுப் போகிறார்கள். ஒவ்வொரு பாட்டு முடிந்ததும் வழக்கமான அப்ளாஸ் இல்லை, ஆரவாரம் இல்லை. ஒரு புருவத் தூக்கல் கூட இல்லை.

இந்த நிகழ்ச்சி எழுப்பும் முக்கியமான கேள்வி, அழகு என்றால் என்ன? கலை என்றால் என்ன? அது தன்னளவில் அனுபவித்து, அளவிடக் கூடியதா, அல்லது பார்வையாளனின் அந்த நேரத்து மன நிலையின் பிரதிபலிப்புதானா?

அன்றைய நிகழ்ச்சி முழுவதும் ரகசிய வீடியோ கமராவில் பதிவு செய்யப்பட்டது. அதை ∴பாஸ்ட் ∴போர்வேர்டில் போட்டுப் பார்த்தால் தமாஷ். பழைய கால சார்ளி சப்ளின் படங்கள் போல் வேடிக்கையான சிறிய உருவங்கள் தாவித் தாவி ஓடுகின்றன. பல பேர் காதில் செல்போனை ஒட்ட வைத்துக் கொண்டே ஓடுகிறார்கள். அல்லது கையில் ப்ரீ∴ப் கேஸ்களையும் காகிதங்களையும் தேநீர்க் குவளைகளையும் சமாளிக்க முயன்றுகொண்டிருக்கிறார்கள். நாய் லைசென்ஸ் மாதிரி கழுத்தில் மாட்டியிருக்கும் அடையாள அட்டை அவர்களுடைய தொப்பைகளில் மோதி மோதி விலகுகிறது. நவீன நகர வாழ்க்கையின் அவசரமும் அலட்சியமும் அபத்தமும் கலந்த சரியான கார்ட்டூன் நடனம்... அட, அது நாமேதான்!

ஒரு வேளை நாமெல்லாம் வேலைக்குப் போகும், பணம் சம்பாதிக்கும் அவசரத்தில் மரத்துப் போய்விட்டோமா? நம் வாழ்க்கையில் ஒரு ஐந்து நிமிடம் ஒதுக்கி உலகத்தின் மிகச் சிறந்த கலைஞன் வாசிக்கும் மிகச் சிறந்த இசைக் கோவையைக் கேட்கவும் நேரமின்றி செவிடாகக் குருடாகப் போய்விட்டோமா? இது போல இன்னும் என்னவெல்லாம் இழந்துகொண்டிருக்கிறோம்?

பி.கு : ஜோஷ்வாவின் பிச்சைப் பாத்திரத்தில் அன்று வசூலான தொகை, 32 டொலர் சில்லறை!

# நாலு கால் பாய்ச்சலில் ஓடும் ரோபோட்

இயந்திர மனிதன் என்று வருணிக்கப்படுகிற ரோபோட்கள் வகை வகையாக உள்ளன. இப்போது நிபுணர்கள் நான்கு கால் பாய்ச்சலில் ஓடும் இயந்திர விலங்கு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

அமெரிக்காவில் எம்.ஐ.டி எனப்படும் தொழில் நுட்பக் கழகத்தில் இது உருவாக்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு இது மணிக்கு 16 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடுகிறது. இதற்கு இயந்திர சீத்தா (ஊாநநவயா) என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிக அதிக வேகத்தில் ஓடுகின்ற விலங்கு சீத்தா ஆகும். இது அதிகபட்சம் மணிக்கு 112 முதல் 120 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக்கூடியதாகும். அதை மனதில் கொண்டு இயந்திர சீத்தா உருவாக்கப்பட்டுள்ளது. (சீத்தா வேறு. சிறுத்தை (Leopard) வேறு. சீத்தாவை சிறுத்தைப் புலி அல்லது சிவிங்கிப் புலி என்று வேண்டுமானால் கூறலாம்.

எம்.ஐ.டி ஆராய்ச்சியாளர்கள் முதலில் கம்பியிலிருந்து தொங்குகிற அத்துடன் கம்பி இணைப்பு மூலம் இயங்குகிற இய்ந்திர சீத்தாவை உருவாக்கினார்கள். அதை ஆராய்ச்சிக்கூடத்துக்குள் வைத்து இயக்கினார்கள். அது நகரும் மேடை மீது மணிக்கு 22 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடுவதாக இருந்தது.

இப்போது உருவாக்கப்பட்டுள்ள இயந்திர சீத்தா திறந்த வெளியில் புல் தரையில் தானாக ஓடுகிறது. சிறு தடை இருந்தால் அதைத் தாண்டி ஓடக்கூடியதாகவும் உள்ளது. இதன் வேகத்தை மணிக்கு 48 கிலோ மீற்றர் அளவுக்கு அதிகரிக்க முடியும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.


இது பற்றிய ஆராய்ச்சி முழு வெற்றி பெற்றால் மனிதன் எதிர்காலத்தில் இயந்திர விலங்கின் முதுகில் உட்கார்ந்து கொண்டு --குதிரை சவாரி மாதிரியில்--அலுவலகம் செல்ல முடியலாம்.

கடந்தகாலத்தில் உருவாக்கப்பட்ட இயந்திர சீத்தாக்களின் உள்ளே பெற்ரோலினால் இயங்கும் இயந்திரங்கள் இடம் பெற்றிருந்தன. அவை ஓடும் போது நிறைய சத்தம் கிளம்பியது.


எம்.ஐ.டி நிபுணர்கள் இப்போது உருவாக்கியுள்ள யந்திர சீத்தா மின்சார மோட்டார் மூலம் இயங்குவதாகும். சத்தம் எழுப்புவதில்லை.

விலங்குகள் எப்படி ஓடுகின்றன என்று அறிவதே அடிப்படை நோக்கமாகும் என்று எம்.ஐ.டி பேராசிரியரும் ஆராய்ச்சிக் குழுவின் தலைவருமான ச்ாங்க்பே கிம் கூறுகிறார். இதை நாம் அறிந்து கொண்டால் நன்கு இயங்குகின்ற செயற்கைக் கால்களை உருவாக்க முடியும். ஒரு வேளை மனிதனின் நடமாட்டத்துக்கு கார்களும் வீதிகளும் தேவையே இல்லாமல் புது விதப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்த முடியலாம் என்றும் அவர் சொன்னார்.

(குறிப்பு : Robot என்பதை பல பத்திரிகைகள் ரோபோ என்று எழுதுகின்றன. பலர் ரோபோ என்று உச்சரிக்கின்றனர். இது முற்றிலும் தவறு. Robot என்பதன் உச்சரிப்பு ரோபோட் என்பதேயாகும்.)



- என்.ராமதுரை -



# இதயத்துக்கு வலுசேர்க்கும் உணவு வகைகள்

◆ கீரைகளில் இதயபலத்துக்கு உதவும் சத்துக்கள் உள்ளன. எனவே தினமும் ஏதேனும் ஒரு கீரையை சாப்பிடுவது நல்லது.

◆ முழுதானியங்களை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். சிவப்பு அரிசியும் உடலுக்கு வலுச்சேர்க்கும். இதயத்தைப் பாதுகாக்கும்.

◆ ஓட்ஸில் நார்ச்சத்துகள் மிகுந்துள்ளன. இது கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்துவதுடன் இரத்த ஓட்டத்தையும் சீராக்கும். இதயநோய் வராமல் தடுக்க உதவுகிறது.

◆ அப்பிள் இதயத்துக்கு மிகவும் நல்லது. இது இரத்தம் உறைவதைத் தடுக்கும்.

◆ பாதாம் எண்ணெய்யில் விற்றமின் "ஈ" உள்ளது. இது உடலிலுள்ள கொழுப்பின் அளவைக் கட்டுக்குள் வைக்கும். இதயநோய் அண்டாமல் தடுக்கும்.


◆ தினமும் ஒரு டம்ளர் மாதுளை ஜூஸ் குடிப்பது இதயநோய் வராமல் நம்மை காப்பாற்றும்.

◆ ஸ்ட்ரோபெர்ரி, ப்ளூபெர்ரி, மல்பெர்ரி போன்ற பழவகைகளில் அதிக அளவு விற்றமின் "சி" கல்சியம், பீற்றா கரோட்டின் சத்துக்கள் உள்ளன. தினமும் காலையில் ஓட்ஸுடன் ப்ளூபெர்ரி பழம் சாப்பிட இதயம் சீராக இயங்கும்.

◆ சோயா உடலிலுள்ள கெட்ட கொழுப்பைக் குறைத்து இதயநோய் வருவதைத் தடுக்கிறது. பாலுக்குப் பதில் சோயா பாலை காலையில் அருந்தலாம். இதயம் வலுப்பெறும்.

◆ உப்பு இதயத்துக்கு எதிரானது. உப்பு போட்ட கடலையைக் கொறிக்கும் போதெல்லாம் இதயம் பாதிக்கப்படுவதாக உணருங்கள்.

# சிங்கப்பூரின் சிற்பி சில குறிப்புகள்



❁ சிங்கப்பூர் என்ற தேசத்தை செதுக்கிய சிற்பியான "லீ க்வான் யூ", பாபாக்கள் என்று அழைக்கப்படும் சீனப் பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். வாழ்ந்து கெட்ட குடும்பத்தை லீயின் அம்மாதான் தூக்கி நிறுத்தினார்.

❁ சிறு வயதில் லீ க்வான் யூவுக்கு இங்கிலாந்து மீது ஈர்ப்பு அதிகம். முதல் உலகப்போரில் ஜப்பான், இங்கிலாந்தை பந்தாடியபோது அந்த ஈர்ப்பு அவருக்கு போய்விட்டது. அதுவே பின்னாளில் அவரது இங்கிலாந்து எதிர்ப்புக் கொள்கையாக மாறியது.

❁ உலகில் அதிக ஆண்டு காலம் ஜனநாயக அரசு ஒன்றின் பிரதமராக இருந்தவர் லீ. "கற்பனைத்திறன் கொண்ட சிறுபான்மையினரே நாட்டை செதுக்குவார்கள்" என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டவர்.

❁ லீக்கு பெருமளவு வருத்தம் கொடுத்தது மலேசியா - சிங்கப்பூர் பிரிவினை. இயற்கை வளங்கள் இல்லாத சிங்கப்பூரை மலேசியர்கள் சிலர் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அந்த கோபமே லீயின் வைராக்கியமாக மாறி சிங்கப்பூரை வளர்ச்சி பெறச் செய்தது.

❁ "பள்ளியில் படிக்கும்போது நான் தவறு செய்தால் ஆசிரியர்கள் பிரம்பால் விளாசுவார்கள். அதுவே என்னை ஒழுக்கமாக மாற்றியது. அதனால்தான், தவறு செய்வோருக்கு பிரம்படி கொடுக்கும் தண்டனை அமுல்படுத்தினேன்" என்பார்.


❁ லீயை பொறுத்தவரை புனைவு நூல்கள் குப்பை. அவரே பல நூல்கள் எழுதியிருக்கிறார். அவருக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் ரொம் கிளான்சி.

❁ இன்றைய அரசியல்வாதிகள் லீயிடம் கற்கவேண்டியதில் முக்கியமானது மதச்சார்பின்மை."அரசியல், பொருளாதாரம் பற்றி ஏதேனும் சொல்ல வேண்டுமானால் உங்கள் மத அங்கிகளை கழற்றிவிட்டு வாருங்கள்" என்பார் லீ.

❁ அவரது ஆட்சியில் கேள்விகள் கேட்ட எதிர்க்கட்சியினர், பத்திரிகையாளர்கள், மனித உரிமையாளர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். ஊழல், வறுமை, உள்நாட்டு குழப்பம் என்று சிக்கலாக இருந்த சூழலில் நாட்டை முன்னேற்ற தனக்கு வேறு வழி இல்லை என்றார் லீ.

❁ தன்னைப் பற்றிய சர்ச்சைகளை பொருட்டாக எடுத்துக்கொள்ள மாட்டார். படித்தவர்கள், படித்தவர்களையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற அவரது கொள்கை மிகுந்த சர்ச்சையைக் கிளப்பியது. மனித அறிவு வளர்ச்சிக்கும் மரபணுக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக கருதிய லீ அவ்வாறு அறிவித்தார்.

# பிரகாசம் சஞ்சிகை இதழ் – 2




நிறுவுனரும் ஆசிரியரும் சுமதி குகதாசன், ஆசிரியர் குழுமம் எஸ். அருளானந்தம், நெடுந்தீவு இரா. தர்மலிங்கம், ரி.திருவானந்தராஜா, நிர்வாக உதவி ரி.நித்தியானந்தன், முகவரி 28, 412 பசல்ஸ் லேன், கொழும்பு - 6, விலை 30 ரூபா.

மொத்தம் 52 பக்கங்களில் ஒளிரும் பிரகாசத்தில் யோ. பெனடிக்ற்பாலன் எழுதிய "எனக்குள்ளே ஒரு எரிமலை புகைகிறது" என்னும் மகுடத்தில் 19 பக்கங்களில் சிறுகதையா விவரணச் சித்திரமா குறிப்பிடப்படாமல் 1973 ஆம் ஆண்டு "களனி" சஞ்சிகையில் பிரசுரமான குறிப்புடன் பிரசுரிக்கப் பட்டுள்ளது. பின் குறிப்பில் சிறுகதை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மா.பாலசிங்கம் எழுதிய "பிரகாசம்" முதல் இதழ் பற்றிய ரசனைக் குறிப்பு, இரண்டு நேர்காணல்கள், "கல்வி வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்" மு.கார்த்திகேசன் B.A(Hon), "சுதந்திர இலங்கையின் அமைச்சரவைகளில் தமிழ் அமைச்சர்கள்" ஆகிய கட்டுரைகள் (இதில் மு.கார்த்திகேசன் கட்டுரை 1973 "களனி"யில் வெளியானது), ஒரு பக்கத்தில் கார்த்திகாம்பிகை முருகலிங்கம், சரவணையூர் சுகந்தன், இளமதி ஆகியோரின் கவிதைகள் மூன்று, சஞ்சிகை ஆசிரியர் சுமதி குகதாசன் எழுதியிருக்கும் 9 பக்க சரவெடி சம்பாஷணை மற்றும் சிறுகுறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

முற்போக்குக் கருத்துகளை விலாவாரியாக விடையங்கள் சொல்கின்றன. மு.கார்த்திகேசன் கட்டுரை அளவாக விடயத்தை ஒப்புவிக்கிறது. மனதில் படி-கிறது. ஏனையவை விரிவுகூடி அலுப்புத்தட்டுகிறது. ஆசிரியர்குழு கவனிக்க வேண்டும். ஆசிரியை மு.கார்த்திகேசன் புத்திரி என்பதும் அறியத்தரப்படுகிறது.

- தனாப்பானா

# ராக நிழல் 1

- குமரன் கிருக்ஷ்ணன் -

சிறுவயது முதல் இலங்கை வானொலியின் இடுப்பில் அமர்ந்தபடி பாடல் வெளிகளில் பயணம் போய் வரும் பாக்கியம் எனக்கு வாய்த்திருந்தது. அதன் விளைவாக விசித்திரமான பெயர்கள் கொண்ட படங்களில் இடம்பெற்ற அற்புதமான பாடல்கள் எனக்குள் பதியன் செ[illegible]ப்பட்டு என்னுடன் எனக்குள் வளர்ந்தபடியே இருந்தன...

பதினோராம் வகுப்பு நுழைந்தவுடன் எனக்கு இசையனுபவ வளர்ச்சி நிதியாக மாதம் நாற்பது ரூபாய் அப்பாவால் ஒதுக்கப்பட்டது. கஸ ட் பதினைந்து ரூபாய், பதிய பதினைந்து ரூபாய். பத்து ரூபாய் மிச்சம் பிடித்தால் பிரதி மூன்றாம் மாதமும் ஒரு கசட் போனஸ ாக பதிந்து கொள்ளலாம் என்ற மகிழ்ச்சி அளிக்கும் திட்டத்தில் மனமெல்லாம் லயித்திருந்த பருவத்தின் துவக்க வருடம்...

ஒரு கஸட் எப்படி பதிவு செய்வது என்பதில் எனக்கென சில பண்புகள் பாடல்கள் கேட்டுக் கேட்டுப் பழகியதில் காலப்போக்கில் உருவாகியிருந்தன. அதில் முக்கியமானது, பாடல் வரிகளும் இசைக்கோர்ப்பும் எனக்குள் பதிவாக வேண்டும். பிறகு அதில் வரும் ஒரு வரியோ இசைத்துளியோ திடீரென்று எனக்குள் முளைத்து நகர்ந்து நாக்கில் வந்து நிற்க வேண்டும். இல்லையேல் அது பதிவு செய்யும் அளவுக்கு நல்ல பாடல் இல்லை என்றொரு எண்ணம்.

இதனால் பெரும்பாலும் ஒரு பாடல் என் லிஸ்டுக்கு வருவதற்குள் சில வருடங்கள் பிடித்து விடும். அத்துடன் பாடல் ஒரு உணர்வுச் சரமாய் இருக்க வேண்டும் என்று மனது சொல்லிக் கொண்டே இருக்கும். உணர்வுச் சரங்கள் என்றாலே அதை தொடுப்பது பெரும்பாலும் நினைவின் கரங்களாகத் தானே இருக்கிறது!

அத்தகைய நினைவுக் கரங்கள் இசையின் விசைக்கேற்ப அசைவதே ஒரு அலாதியான அனுபவ அற்புதம் இல்லையா? முதலில் மேலோட்டமான பாட்டு. பிறகு வரி, வரியின் பொருள், இதைத்தூக்கிக் கொண்டு நகரும் இசை, அந்த இசை வாகனத்தில் உட்கார்ந்து பொருளை அசை போட்டபடி அலையும் மனது, அந்த மனம் போகும் இடங்கள், இடங்களில் நடக்கும் நிகழ்வுகள், அந்த நிகழ்வுகள் சார்ந்த நினைப்புகள்....

பிறகு அதன் ஒவ்வொரு ஸ்வரஸ்தானத்திற்குள்ளும் ஒட்டிக் கொண்டு, கேட்கும் காலத்தையெல்லாம் அதனுள் இட்டு பெருக்கிக் கொண்டே போகும் நினைப்புகள் பற்றிய நினைப்புகள்.... முத்தாய்ப்பாக பாட்டு என்பதே நினைவுகளின் ஸ்வர அசைவு என்ற நிலைப்பு....!

இத்தகைய நிலைப்பாடு வேண்டும் மனது ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு விற்கப்படும் "ரெடிமேட" கஸட்டுக்களை விரும்புவது இல்லை. இவ்வாறு வருடக்கணக்கில் உள்ளேற்றி வைத்திருந்த பாடல்கள் ஒவ்வொன்றாக கஸட் வடிவில் என் பாடப்புத்தகங்கள் பக்கத்தில் வந்து உட்காரத் துவங்கின.



"பகவதிபுரம் ரயில்வே கேட்", "வட்டத்துக்குள் சதுரம்", "முடிவில்லா ஆரம்பம்", "பாலூட்டி வளர்த்த கிளி", "மணிப்பூர் மாமியார்", "நதியை தேடி வந்த கடல்", "நெஞ்சிலாடும் பூ ஒன்று" என்று என் லிஸ்டில் இருந்த படப்பெயர்களையும் பாடலின் முதல் வரியையும் கஸட் கடைக்காரர் மேலோட்டமாக படித்துப் பார்க்கும் பொழுது அவர் முகத்தில் தெரிவது ஏளனமா கேவலமா பச்சாதாபமா கோபமா என்று புரியாது...

படித்து விட்டு ஒரு மாதிரி ஏற இறங்க என்னை பார்த்தபடி "இதெல்லாம் இல்லப்பா" என்பார் லிஸ்டில் முக்கால் வாசியை பிழைக்குறி போட்டபடி... அப்போதெல்லாம், இந்தப் பாடல்களை இலங்கையை விட்டால் வேறெங்கும் கேட்கவே முடி யாதோ என்று வியப்பும் கவ-லையுமாக ஏமாற்றத்துடன் வீடு திரும்புவேன்... இப்படியாக மாதங்கள் செல்லச் செல்ல, வேறு சில கடை-களும் கையை விரிக்க, ஒரு முறை நான் கொடுத்த லிஸ்டை பார்த்து "தங்க ரங்கனா..." ("உதடுகளில் உனது பெயர் ஒட்டிக் கொண்டது அதை உச்சரிக்கும் போது நெஞ்சம் தித்திக்கின்றது" - எம்.எஸ்.வி. - ஜெயச்சந்திரன்-சுசீலா) என்று அவர் அதிர, கடையில் இருந்த சிலர் திரும்பிப் பார்த்தனர்.

அதற்கு முந்தைய மாதம் தான் "நண்டு" படத்தில் வரும் "கைசே கஹுன்" பாடல் கொடுத்த போது "எப்படிப்பா தமிழ் படத்தில ஹிந்தி பாட்டு வரும்" என்று அவர் உசுப்பேறியிருந்தார்... "சும்மா நீயா எதையாவது எழுதிட்டு வராத. தங்கரங்கன் என்று படமெல்லாம் இல்ல" என்று சற்றே குரலுயர்த்திச் சொல்லி விட்டு, சற்று நேர அமைதிக்குப் பின், பக்கத்து காம்பவுண்ட்ல ஒரு கடை இருக்கு அங்கு போய் கேள்" என்றார்.

உள்ளே நுழைந்தவுடன் நீளமான மேசைக்கு அந்தப் பக்கம் அமர்ந்திருந்த பெரியவர் ஒருவர் எழுந்து "வாங்க தம்பி" என்றார். அவர் தான் குணசீலன். அவருக்கும் எனக்கும் குறைந்தது இரண்டு தலைமுறை இடைவெளியேனும் இருக்கும். பளீர் வெள்ளையில் சட்டையும் வேட்டியும் கறுப்பு நிற தடி பிரேமில் கண்ணாடியும் போட்டிருந்தார்.

(தொடரும்)





## தம்பி இராமனா இராவணனா?

கருவுற்றிருந்த தாய் மகளிடம் கேட்டாள்
"கூறு மகளே! தம்பி வேண்டுமா, தங்கை வேண்டுமா?" மகள் சொன்னாள் "தம்பியே வேண்டும்" அம்மா வினவினாள் "யாரைப் போல்?"
தயக்கமின்றிச் சொன்னாள் பெண்
"இராவணன் போல்" என்று
அதிர்ந்து போனாள் அன்னை
"என்ன உளறுகிறாய், இராமன் என்பதற்கு இராவணன் என்றாயோ?"
சிரித்தாள் மகள்.
"தங்கையின் அவமானம் தீர்க்க
தன் அரசையும் ஆயுளையும்
இழக்கத் துணிந்தவன்.
அன்னியன் மனைவியைக் கவர்ந்தாலும்
கை விரல் கூட வைக்காதவன்.
ஆனால் என்ன செய்தான் இராமன்
அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னான்
அன்பு மனைவி தன்னை.
எவனோ பழி சொல்லக்கேட்டு
கருவுற்ற மனைவியைக் காட்டுக்கு அனுப்பினான்
அம்மா! நீயும் ஒரு சகோதரி, ஒரு மனைவி
நீயே சொல்! இராவணன் போல் தம்பி வேண்டுவதில் தவறெதேனும் உண்டோ?

### ஆச்சரியத் தகவல்

# அனுமான் இமயமலையில் தேடிய சஞ்சீவினி மூலிகையை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு!




ரோடியோலா எனும் அதிசய மூலிகை. இராமாயணத்தில் போரில் உயிரிழந்த இலட்சுமணனை மீண்டும் உயிர்பெறச் செய்ய அனுமான் சஞ்சீவி எனும் மூலிகைகள் நிறைந்த மலையைத் தூக்கிச் சென்றதாக ஒரு பகுதி வரும்.கிட்டத்தட்ட அந்த சஞ்சீவினியைப் போன்ற அபூர்வமான மூலிகை ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் இமய மலையில் கண்டு பிடித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிர் காக்க உதவும் இந்த மூலிகையானது, இராமாயண காலத்தில், அனுமானால் தேடப்பட்ட சஞ்சீவினி மூலிகையாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் அது புராணத்தில் சொல்லப்படும் "சஞ்சீவினியே தானா என்பது இன்னமும் முடிவாகவில்லை. இந்த அபூர்வ மூலிகை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன், இமயமலை போன்ற உயரமான சிகரங்களில் வாழத் தேவையான சக்தியையும் தரும் என்று சொல்லப்படுகிறது.

இமயமலையில் உயிர் வாழ்வதற்கு மிகவும் சிரமப்படும் ஒரு பகுதியில் உயிர்களைப் பாதுகாக்க உதவும் ரோடியோலா என்ற ஓர் அதிசய மூலிகையை அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் இந்த மூலிகை சோலோ என்று அழைக்கப்படுகிறது. இந்த மூலிகையின் அரிய குணங்கள் குறித்து இன்னும் தெளிவாகக் கண்டறியப்படவில்லை என்றாலும், லடாக் பகுதிவாசிகள் இதன் இலைகளை உணவுப் பொருளாகப்பயன்படுத்தி வருகின்றனர்.லே பகுதியில் உள்ள மலைப் பகுதி ஆய்வுக்கான இராணுவ அமைப்பின் விஞ்ஞானிகள் இந்த மூலிகையின் மருத்துவ குணங்க ளை ஆராய்ந்து வரும் நிலையில், இதனை "சஞ்சீவினி" மூலிகை என்றே விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மேலும், இந்த மூலிகையால் நம்மை அணுக்கதிர்களில் இருந்தும் காத்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இமயத்தின் அருகில் உள்ளலே பகுதியில் இருக்கும் "டி.்.பெ ன்ஸ் இன்ஸ்டிடி யூட் ஆ.்.ப் ஹை ஆல்டிட் யூட ரிசர்ச் " (திஹர்) எனும் அமைப்பின் இயக்குநர் ஆர்.பி.ஸ்ரீவஸ் தவா கூறியதாவது:

(தொடரும்...)

## குறுந்தகவல் தெரியுமா? தெரியுமா?



- ஒரு அங்குலம் மழை பெய்தது என்கிறார்கள். இதன் பொருள் என்ன தெரியுமா? ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் 112 தொன் எடையுள்ள நீர் கொட்டியுள்ளது என்பதுதான் இதன் பொருள்.
- நத்தை வேகம், ஆமை வேகம் என்கிறார்களே...? இதன் வேகம் எப்படி என்று தெரியுமா? நத்தை மணிக்கு 17 அடி தொலைவும், ஆமை மணிக்கு இருநூற்று இருபத்தேழு அடி தொலைவும் செல்லக் கூடியது.
- அமோனியா, ஆஅர்செனிக், கரியமிலவாயு, கார்பன் மானாக்சைடு, கிர்ஸ்டிக், கோலிடைன், நிக்கோடின், பர்பரால், பார்வோலிஸ், பிரிடின், பென்லோ, பைரின், ப்ரஸ்சிக, லெண்டிடைன், லூட்டிடைந் இவையெல்லாம் என்ன தெரியுமா? இவையனைத்தும் சிகரெட் புகையிலுள்ள நச்சுக்கள்.
- ஜோயி என்றால் என்னவென்று தெரியுமா? கங்காருவின் வயிற்றுப் பையிலிருக்கும் குட்டியைத் தான் ஜோயி என்கின்றனர்.
- பிறந்த குழந்தைகள் எப்படி அழுதாலும் அதன் கண்களிலிருந்து கண்ணீர்வராது. இது ஏன் தெரியுமா? குழந்தை பிறந்த பின்பு, அதன் கண்ணீர்ச் சுரப்பிகள் வளர்ந்து செயற்பட 15 நாட்களாகும்.

## சிரிக்க சிரிக்க இரு கொள்ளையர்கள்



ஒரு முதலாளியும்,கொள்ளைக்காரன் ஒருவனும் சந்தித்துக் கொள்கின்றனர்.

முதலாளி கொள்ளைக்காரனைப் பார்த்து, "தாங்கள் யார்?" என்று கேட்டார்.

கொள்ளைக்காரன், "நான் ஒரு கொள்ளைக்காரன், நான் பணக்காரர்களிடம் கொள்ளையடித்து வாழ்கிறேன். ஆமாம், தாங்கள் யாரென்று அறிந்து கொள்ளலாமா?" என்றான்.

அதற்கு முதலாளி, "நான் ஒரு முதலாளி. ஏழைகளைக் கொள்ளையடித்து பணக்காரனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்றார்.


## ஊக்கம் தரும் தூக்கம்...?



காலையில் தூக்கம்
கடமைக்குத் தாக்கம்
பகலில் தூக்கம்
உழைப்புக்குத் தேக்கம்
மாலையில் தூக்கம்
மந்தப்புத்திக்கு ஆக்கம்
அதிகத் தூக்கம்
அற்ப ஆக்கம்
இரவில் தூக்கம்
இதயத்துக்கு ஊக்கம்!

### குட்டிக்கதை

## இனப்பற்று



பொழுது விடியப்போகும் சமயம், முன்னிரவில் தங்களுக்காக இரை தேடச் சென்ற தாய்ப்புலியை எதிர்பார்த்து இரு குட்டிப் புலிகள் காத்திருந்தன. முன் கால்கள் இரண்டையும் நீட்டிச் சோம்பல் முறித்துக் கொண்டே, இவ்வளவு நேரமாகியும் அம்மாவைக் காணோமே? என்றது ஒரு புலிக்குட்டி. இன்னும் ஒன்றும் கிடைக்கவில்லையோ என்னமோ? என்றது இன்னொரு புலிக்குட்டி, நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டே. எனக்குப் பசி காதை அடைக்கிறது.....எனக்கும்தான் பசி வயிற்றைக் கிள்ளுகிறது! எதற்கும் நாம் கொஞ்சத் தூரம் சென்று அம்மாவைத் தேடிப் பார்ப்போமா? வேண்டாம், வேண்டாம்.

நான் வரும்வரை நீங்கள் குகையைவிட்டு வெளியே வரக்கூடாது என்று அம்மா சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள்! கடைசிவரை அம்மா வராமலே இருந்து விட்டால்.....? என்னை நீயும் உன்னை நானும் சாப்பிட்டு விடுவதா என்ன? - பேசாமல் இரு அப்படி வராவிட்டால் அப்புறம் பார்த்துக் கொள்வோம்! என்று அவற்றில் ஒன்று எரிந்து விழுந்தது.

இன்னொன்று, அதுவரை பசியோடு இங்கேயே கிடந்து தவிக்க வேண்டுமாக்கும்! என்று அலுத்துக் கொண்டே, தன் கால் விரல்களில் ஒன்றை லேசாகக் கடித்து, அதில் கசிந்து வந்த இரத்தத்தை நக்கி ருசி பார்த்தது.அதற்குள் அவற்றின் அம்மா சற்றுத் தூரத்தில் உறுமிக்கொண்டு வரும் சத்தம் கேட்கவே, இரண்டு குட்டிகளும் ஏக காலத்தில் துள்ளிக் குதித்து அதை வரவேற்கத் தயாராயின. தாய்ப்புலி தங்களை நெருங்கியதுதான் தாமதம் குட்டிப் புலிகள் இரண்டும் ஏமாற்றம் அடைந்தன. ஏனெனில், அவை எதிர்பார்த்ததுபோல் அம்மாவின் வாயில் எந்தவிதமான இரையும் இல்லை. ஏன் அம்மா, ஒன்றும் கிடைக்க வில்லையா? கிடைத்தது அதற்குள் இன்னொரு புலி வந்து.....என்ன கிடைத்தது?

ஒரு கொழுத்த காட்டுப் பன்றி. தன்பாட்டுக்கு அது ஒரு மரத்தடியில் உதிர்ந்து கிடந்த பழங்களைப் பொறுக்கித் தின்று கொண்டிருந்தது. நான் அதன்மேல் பாயத் தயாராவதற்குள் இன்னொரு புலி வந்து அதைக கவ்விக்கொண்டு போய்விட்டது.... அதை நீ சும்மாவா விட்டாய்? சும்மா விடாமல் என்ன செய்வதாம்? நீ அதை ஏன் அடித்துக் கொன்றிருக்கக்கூடாது? சீசீ, நாம் கூட மனிதர்களா என்ன? தன் இனத்தைத் தானே அடித்துக் கொல்ல? - நாம் மிருகங்கள் - அப்படியிருக்கும்போது நமக்கு நாமே எதிரிகளாக முடியுமா? - அந்தப் பன்றி போனால் இன்னொரு பன்றி! என்று சொல்லிக் கொண்டே, தாய்ப்புலி மீண்டும் இரை தேடச் சென்றது. குட்டிப் புலிகள் இரண்டும் தங்கள் பசியை மறந்து, நாம் மிருகங்கள்: மனிதர்களைவிட உயர்ந்த மிருகங்கள்! என்று கும்மாளம் கொட்டின.

# சனசமூக நிலைய செயற்பாடுகள் பயனுடையதாக அமையவேண்டும்

## புளொட் அமைப்பாளர் சிவநேசன் தெரிவிப்பு



யுத்தத்தினால் பல்வேறு பின்னடைவுகளை இக் கிராம மக்கள் சந்தித்தபோதிலும் இங்குள்ள இளைஞர்கள் இந்த சனசமூக நிலையத்தினை ஆரோக்கியமான வழியில் தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றார்கள். இக்கிராம மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த சனசமூக நிலையம் இருப்பதனை அவதானிக்க முடிவதுடன் இங்கு கலைவாணி சனசமூக நிலையம் தொடர்ந்து சிறப்புற இயங்கி வருகின்றது என புளொட் அமைப்பின வன்னிப்பிராந்திய அமைப்பாளரும் மத்திய குழு உறுப்பினருமான சிவநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தின் மணிவிழா நிகழ்வுகள் கலைவாணி சனசமூக நிலையத்தலைவர் சாந்தலிங்கம் சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது சனசமூக நிலையத்திற்காக புதிதாகஅமைக்கப்பட்ட கலையரங்கினை திறந்து வைத்த பிரதம விருந்தினர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று 60ஆவது ஆண்டு மணிவிழாக் காணும் இச் சனசமூக நிலையம் தொடர்ந்து 75ஆவது ஆண்டு விழா மற்றும் நூற்றாண்டு விழாக்களையும் காணும என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை. இன்று இங்கே கலைநிகழ்ச்சிகளிலும் விளையாட்டுக்களிலும் பங்கு கொண்டிருக்கின்ற இந்தச் சிறார்கள் இதன் நூற்றாண்டு விழாவினை நடாத்துவார்கள் என்பதை இன்று இங்கிருக்கும் மக்களினதும் சனசமூக நிலையத்தினதும் செயற்பாட்டிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. ஆகவே கலைவாணி சனசமூக நிலையம் தொடர்ந்து நூற்றாண்டு விழாக்களையும் சிறப்புறக் கொண்டாட வாழ்த்துகின்றேன் என்றார்.

தொடர்ந்து சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பெரியோர்கள் இளைஞர்கள் பெண்கள் என ஏறத்தாழ அக்கிராமத்து மக்கள் அனைவருமே கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புளொட் அமைப்பின் வன்னிப் பிராந்திய அமைப்பாளரும் மத்தியகுழு உறுப்பினருமான சிவநேசன் (பவன்) பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக அம்பிகா விஜயகுமார் கௌரவ விருந்தினர்களாக வலி. தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.குமணன் (முன்னாள் நிலையத் தலைவர்) த.ஜெயராஜா (முன்னாள் நிலைய பொருளாளர்) சி.தவராசா உள்ளிட்டோரும் கலந்து கொண்டார்கள்.(63)

# யாழ். இந்துக் கல்லூரியின் தமிழ் மொழித்தின நிகழ்வு

யாழ். இந்துக் கல்லூரியில் தமிழ் மொழித்தினம் மிகவும் சிறப்பான முறையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும், யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட உதவிப்பதிவாளருமான இ.சர்வேஸ்வரா வும் அவரது பாரியாரும் கலந்து கொண்டனர்.

முதன் நிகழ்வாக தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற வில்லுப்பாட்டு குழுவினருக்கு பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கப்பட்டு கஸ்தூரியார் வீதிச் சந்தியில் இருந்து குமாரசுவாமி மண்டபம் நோக்கி பெற்றோர்கள் மாணவர்கள் சகிதம் மங்களவாத்தியம் இசைக்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ் மொழி வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்த்தின வாழ்த்து ஆகியன இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினராலும், அவரது பாரியார் மற்றும் அதிபரினாலும் கோட்ட மட்ட வலய மட்ட மாகாண மட்ட தேசிய மட்ட தமிழதின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் விவாதப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றி கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதன் பின்னர் மேடை நிகழ்வாக குழு இசையும் அதனைத் தொடர்ந்து தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்ற மாணவனது பேச்சுப் போட்டியும இடம் பெற்றது. இதன் பின் தேசிய மட்டத்தில் முதல் இடம் பெற்ற 'தக்கன் வதம்' எனும் வில்லுப்பாட்டு நிகழ்வும் கல்லூரி சமூகத்தின் முன் அரங்கேற்றப்பட்டது.

இதனையடுத்து 'இன்றைய காலகட்டத்தில் தமிழ் வளர்க்கப்பட்டு வருகின்றதா இல்லை சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதா' எனும் தலைப்பில் விவாதம் கல்லூரி மாணவர்கள் இருபகுதியாக அமர்நதிருந்து விவாதித்தனர். இறுதியாக நாடக நிகழ்வும் நடாத்தப்பட்டது. (48)

# உடுவில் மகளிர் கல்லூரியின் ஆண்டு நிறைவையொட்டி நடைபவனி



தெற்காசியாவின் முதலாவது பெண்கள் பாடசாலையான உடுவில் மகளிர் கல்லூரியின் 190ஆவுது ஆண்டு நிறைவையொட்டி கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள், அபிமானிகள் இணைந்து நீண்ட நடைபவனியொன்றை கடந்த சனிக்கிழமை நடாத்தியுள்ளனர்.

சுன்னாகம் சந்திக்கு அருகில் ஆரம்பித்த இந்த நடைபவனி, கே.கே.எஸ். வீதியூடாக வந்து, மருதனார்மடம் சந்தியால் மானிப்பாய் வீதியூடாக உடுவில் மகளிர் கல்லூரியைச் சென்றடைந்தது.

அலங்கார ஊர்திகள், அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டில், மாட்டு வண்டில் என்பவற்றுடன், மாணவியரின் பாண்ட் வாத்திய இசை, நடன புவனி என்பன பார்ப்போரைக் கவரும் வகையில் அமைந்திருந்தது.

பாடசாலை மாணவியர், ஆசிரியர், அதிபர் என அனைவரும் நீல நிற ஆடைகள் அணிந்து இந்த நடைபவனியில் கலந்துகொண்டதுடன், உடுவில் மகளிர் கல்லூரியின் பெருமைகளை கோஷங்களாகக் கூறிச்சென்றனர்.

பேரணியின் நிறைவாக, உடுவில் மகளிர் கல்லூரியில் வர்த்தகச் சந்தையொன்றும், பாடசாலை ஆசிரியர்கள் பங்குபற்றிய இன்னிசை நிகழ்வும் நடைபெற்றது. (48)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு மனிதன் பிறப்பதற்கு ஏதேனும் ஒரு திடமான காரணம் நிச்சயமாக இருக்க வேண்டும். அது ஒரு தேசத்தை வழி நடத்தவோ, ஒரு குறிப்பிட்ட குழுவினரை பாதுக்காக்கவோ தான் என்றில்லை ஒரே ஒரு உயிரை ஆழமாக தொட முடிந்தாலும் போதுமானதே.

பிறந்து சில மணி நேரங்களில் இறந்து விடும் குழந்தையின் அற்ப ஆயுளுக்கும் கூட ஏதேனும் காரணம் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல நமது வாழ்வின் நாட்களும் நிமிடங்களும், அதன் அனுபவங்களும் நாம் சந்திக்கும் மனிதர்களும் கூட ஏதோ யாரோ ஒருவரின் திட்டமிட்ட செயல் போல நிகழ்வது ஆச்சர்யம் அளிக்கிறது. அந்த வரைபடத்தின் வழியில் தான் நாம் பயணிக்கிறோம்.

வாழ்வை நொடியில் புரட்டிப்போட்டு விடுகிற தருணம் நமது எல்லோருடைய வாழ்விலும் நிழலாக தொடர்வதுண்டு. அதனால் எதையும் குறித்து கர்வம் கொள்ளத் தேவையில்லை.

நம்மால் பாலஸ்தீனம் சென்று போராட முடியாது, இந்திய எல்லையில் நின்று போரிட முடியாது, சோமாலியா சென்று ஒரு உயிருக்கேனும் சோறிட முடியாது, குறைந்தபட்சம் ஒரு ஜோடி இதழ்களில் மட்டுமேனும் ஒரு குறுஞ்சிரிப்பை வரவழைத்து விட முடியும். அதற்கு பெரிதாக சேவை மனமெல்லாம் தேவையில்லை. சக உயிருக்கான சிறிய அக்கறை போதுமானது. அது நம்மையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தும் மீள முடியாத பெரும் போதை. சுவைத்தவர்கள் நிச்சயம் கைவிட முடியாத ஒரு பழக்கம் அது. – சபிதா இப்ராகிம்

இன்றைய இளைஞர்களின் நிலையைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் கூட இப்படி இல்லை. ஆனால் கணினி யுகத்தில் எல்லாமே எந்திர மயமாகி விட்ட பிறகு சிறார்கள் இயற்கையை விட்டு வெகுதூரம் போய் விட்டார்கள். எப்போதுமே விடியோ கேம்ஸ். அந்த விளையாட்டுக்களைப் பார்த்தால் துப்பாக்கியை எடுத்துக் கண்டபடி எல்லோரையும் எல்லோரும் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விளையாட்டு இல்லாவிட்டால் முகநூல். ஐந்து வயதுக் குழந்தை கூட முகநூலில் தன் புகைப்படத்தைப் போட்டு லைக் வாங்குகிறது.

சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும் அருவி தெரியவில்லை. நதி தெரியவில்லை. விண்மீன்கள் தெரியவில்லை. தென்றல், மலை, பூமி, நல்ல சங்கீதம் எதுவுமே தெரியவில்லை. காலையில் கேட்கும் குயில்களின் சப்தத்தை உணரும் சிறுவர்கள் இப்போது யாரேனும் இருப்பார்களா என்று தெரியவில்லை. தங்களுக்குத் தேவையான குமாஸ்தாக்களை உருவாக்குவதற்காக வெள்ளைக்காரன் உருவாக்கிய கல்விமுறையை வைத்துக் கொண்டு நம்மவர்கள் இன்னமும் குமாஸ்தாக்களையே உருவாக்கி வருகிறார்கள். இதில் கணினிப் புரட்சியும் நிகழ்ந்த பிறகு தங்கள் சிருஷ்டித் திறனையே இழந்து விட்ட ஒரு தலைமுறை பிறந்து விட்டது.

மேற்கத்திய சீரழிவுக் கலாச்சாரத்தின் தாக்கம் என்று இதைச சொல்ல மாட்டேன். அது மிகப் பெரிய தவறு. இவர்களின் வீழ்ச்சிக்கு மேற்கத்திய கலாச்சாரத்தை சுட்டிக் காட்டுகிறார்கள். நாம் மேற்கத்தியரின் கண்டு பிடிப்புகளை எடுத்துக் கொண்டு அதைத் துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறோம். சினிமா அங்கே வெறும் பொழுதுபோக்குச் சாதனம் அல்ல; அது அங்கே கலையாகவும் உள்ளது. கணினி கல்விக்கான சாதனம். யாரும் தொலைக்காட்சிக்கு அடிமை இல்லை. கையிலேயே அலைபேசியை வைத்துக் கொண்டு அலையும் இளைஞர்களை நான் ஐரோப்பாவில் பார்த்ததில்லை.

மிக முக்கியமாக யாரும் அங்கே மரங்களை வெட்டுவதில்லை. அதனால் ஒரு பெரிய நகரமாகவே இருந்த போதிலும் ஒரு வனத்தில் வாழ்வது போல் இருக்கிறது. நம் அளவுக்கு அவர்கள் இயற்கையிலிருந்து அந்நியமாகி விடவில்லை.

மேலும், அவர்கள் பணத்தைச் சேர்த்து வைப்பதில்லை. பயணம் செய்வதற்கே பணத்தைச் சேர்க்கிறார்கள். பயணத்தின் மூலம் அவர்கள் தங்களுடைய அனுபவங்களை செழுமைப்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் மனித வாழ்வு மேற்கத்திய நாடுகளில் நம்மை விட மேம்பட்டதாக இருக்கிறது. – சாரு நிவேதிதா

வெறுப்பில் வெல்ல நினைப்பவர்களே அஞ்சவில்லை. உலகை அன்பால் நிறைக்கும் நான் ஏன் கவலைப்படவேண்டும். – பொப் மார்லி

# ஊவா மாகாணசபைத் தேர்தல் முடிவு; மக்கள் அரசுக்கு வழங்கிய எச்சரிக்கை

## – வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு –



மக்கள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை சமிக்ஞை வழங்கியுள்ளதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். கடுமையான போட்டிக்கு மத்தியிலேயே அரசாங்கம் இம்முறை தேர்தலில் வெற்றியீட்டியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வறுமை, வறட்சி போன்ற காரணிகளை விடவும் பிள்ளைகளின் எதிர்கால பாதுகாப்பை கருத்திற்கொண்டே ஊவா மாகாண மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். பொதுபல சேனா போன்ற கடும்போக்குவாத அமைப்புக்களின் நடவடிக்கைகளினால் சிறுபான்மையின் மக்கள் கடும் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அதிருப்தியை ஐக்கிய தேசியக் கட்சி சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளினால் வறிய மக்கள் இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழக்க நேரிட்டுள்ளதாகவும், இந்த மக்கள அதிருப்தி எதிர்க்கட்சிகளுக்கு வலுச்சேர்க்கும எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்படாமையினால் அரசாங்க ஊழியர்களின் ஆதரவு வெகுவாகக் குறைவடைந்துள்ளது எனவும், இதனைத் தபால் மூலத் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஊவா மாகாணசபைக்கு தெரிவான உறுப்பினர்களின் விபரம் வர்த்தமானியில்

ஊவா மாகாண சபைத்தேர்தலில் வெற்றி பெற்று மாகாண சபைக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர்பட்டியலைப் இந்த வாரத்திற்குள் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்றுள்ள வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியல் இன்று தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைக்கும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த பெயர்பட்டியல் கிடைத்ததன் பின்னர் ஊவா மாகாண சபைக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தகமானியில் வெளியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# காணாமற்போனோர் பதிவு; கிளிநொச்சியில் இரண்டாம்கட்டம்

காணாமல் போனோர் தொடர்பாக கண்டறியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு இதுவரையில் ஐந்து மாவட்டங்களில் சாட்சிப் பதிவுகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் செயலாளர் எச். டபிள்யூ. குணதாச இதனை எமது செய்தி சேவைக்கு தெரிவித்தார்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் ஊடாக சுமார் 19 ஆயிரத்து 500க்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரையில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சாட்சிப் பதிவுகள் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையில் கிளிநொச்சியில் இரண்டாவது தடவையாகவும் சாட்சிப் பதிவுகள் இடம்பெறவுள்ளன.

# இலங்கை விமானத்தை தாக்கியது பறவை

(திருச்சி)

திருச்சி விமான நிலையத்தின் இருந்து இலங்கைக்கு புறப்பட்ட பயணிகள் விமானம் ஒன்று அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் 2.30மணிக்கு ஸ்ரீலங்கன் ஏயல்லைன்ஸ் விமானம் திருச்சி விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு புறப்பட்டது ஓடு பாதையில் இருந்து விமானம் மேலே எழும்பியபோது பறவை ஒன்று விமானம் மீது மோதியது விமானத்தின் முன்பக்க காற்றாடியில் பறவை சிக்கியதால் காற்றாடி பழுதடைந்தது.

இதைக் கவனித்த விமானி விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார். விமானத்தில் இருந்த 139 பயணிகளும் திருச்சி ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டனர். பழுதடைந்த காற்றாடி மாற்றப்பட்டவுடன் விமானம் புறப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# க.பொ.த (சா/த) பரீட்சை 5,78,135பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதரண தரப் பரீட்சையில தோற்றுவதற்காக 5 இலட்சத்து 78,135 பேர் விண்ணப்பித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இவர்களில் 3 இலட்சத்து 70,030 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவிக்கின்றார்.பரீட்சை நிலையங்களை ஒதுக்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட மேலும் சில விடயங்களின் முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி கல்விப் பொதுத்தராதர சாதரண தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது.

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் இருவர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் பகுதியைச் சேர்ந்த சோதிவேல் டொனால்ட் (வயது 22), கதுறுவெலயைச் சேர்ந்த எம்.இஷட். முஹம்மத் ஜறூக் (வயது 22) ஆகியோரே தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு முகத்துவார (பார்றோட்) வீதியிலுள்ள கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தங்கும் விடுதியினுள் புகுந்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவபீடத்தின் 3ஆம் வருட மாணவர்கள் 6 பேர், 3 மோட்டார் சைக்கிள்களில வந்து தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக தாக்குதலுக்குள்ளான இரு மாணவர்களும் பொலிஸ் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்நிலையில், எம்.இஹட். முஹம்மத் ஜறூக் என்பவர் நினைவாற்றல் இழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வழிபாட்டு தலம் மீது தாக்குதல் ஞானசார தேரரிடம் விசாரணை

(கண்டி)

கண்டியில் மதவழிபாட்டுத் தலம் ஒன்றின் மீதான தாக்குதல் குறித்து ஞர்னசார தேரரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர், கண்டியில் உள்ள சிறுபான்மையினரின் மதவழிபாட்டுத் தலம் ஒன்றின் மீது குண்டர்கள் சகிதம் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

இதற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் கண்டி தலைமையக பொலிஸ் நிலையத்தில் இச்சம்பவம் தொடர்பாக ஞானசார தேரரிடம் நேற்றுமுன்தினம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

பின்னர் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு அவரை அனுப்பியுள்ளனர்.

அவருக்கெதிரான ஆதாரங்கள் மற்றும் சாட்சிகள் இருந்த நிலையிலும் பொலிஸார் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் வியாபாரி பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தனது காரில் ஹெரோயின் போதைப் பொருளை எடுத்துச் சென்ற நபர் ஒருவர், பொலிஸாரால் கல்கிஸையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதியில் பயணித்த காரை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளையிட்டனர். எனினும் சந்தேக நபர் வாகனத்தை நிறுத்தாது சென்றதால், பொலிஸார் அவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய போதும் சந்தேக நபர் வாகனத்தை கல்கிஸ்சை வரை செலுத்திச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் தமது ஜீப் வண்டியை வாகனத்திற்கு குறுக்காக நிறுத்தி சந்தேக நபரின் காரை நிறுத்தியுள்ளனர்.

குடு ருவான் என்று அழைக்கப்படும் ருவான் தம்மிக அலியாஸ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் வாகனத்தில் இருந்து 900 கிராம் ஹெரோயினை தாம் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பன்றி வேட்டையில் ஈடுபட்ட 4பேர் கைது

காலி - வதுரம்ப பிரதேசத்தில் பன்றி வேட்டைக்குச் சென்ற நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் 7 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வதுரம்ப பொலிஸார் தெரிவித்தனர்.

# வாக்களிக்கச்சென்ற அமைச்சர் அடையாளஅட்டையின்றி திரும்பிச்சென்றார்

தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் வேறு ஆவணங்களுமின்றி வாக்களிக்கச் சென்ற சீனி கைத்தொழில் அமைச்சர் லக்ஸ் மன் செனவிரட்ன திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மஹியங்கனை தேசியப் பாடசாலையில் நிறுவப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக அமைச்சர் செனவிரட்ன சென்றிருந்தார். அமைச்சர் செனவிரட்ன தமது நாடாளுமன்ற அடையாள அட்டையை தேர்தல் அதிகாரிகளிடம் காண்பித்துள்ளார்.

எனினும், அந்த ஆவணத்தை ஆள் அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்து அமைச்சரை வாக்களிக்க விடாது அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

பின்னர் உடனடியாக ஓர் தற்காலிக அடையாள அட்டையை தயாரித்து அதனை சமர்ப்பித்து பிற்பகல் 3.30 மணியளவில் அமைச்சர் வாக்களித்துள்ளார். இரண்டு புகைப்படங்களை எடுத்து அவற்றை கிராம உத்தியோகத்தரிடம் உறுதி செய்து கொண்டு, புகைப்படத்தை பதுளை தெரிவத்தாட்சி அதிகாரியிடம் உறுதிப்படுத்தி தற்காலிக ஆள் அடையாள ஆவணமொன்றை அமைச்சர் தயாரித்திருந்தார் எனத தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அடையாள அட்டையை அமைச்சரின் கொழும்பு வீட்டில் வைத்துவிட்டு சென்றதனாலேயே இவ்வாறு வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

# கொள்ளைச் சம்பவம்; 3 நபர்கள் கைது


(கொழும்பு)

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 16ஆம் திகதி கிரில்லவெல பிரதேசத்தில் முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி 8இலட்சம் ரூபா கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்கள் எம்பிலிப்பிட்டிய - கந்துருகஸ்ஆர பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.


சந்தேகநபர்கள் துங்கம மற்றும எம்பிலிபிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பின்வரும் உருவைப் பயன்படுத்தி 23, 24 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.
இவ்வுருவில் இரு நகரங்களில் உள்ள இரு பாதைகளின் படங்கள் காணப்படுகின்றன. இல-1 சந்தை, 2 வங்கி, 3 பூங்கா, 4 மிருகக்காட்சிச்சாலை என்பவற்றைக் குறிக்கின்றன.






23. நிலா தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே எவ்விடத்திற்குச் செல்வதற்குக் குறைந்த தடவைகள் வலப்பக்கம் திரும்ப வேண்டும்.
1) சந்தை 2) பூங்கா 3) வங்கி 4) மிருகக்காட்சிச்சாலை

24. கலா தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே சென்றால், எவ்விடத்திற்குச் செல்வதற்குக் கூடிய தடவை இடப்பக்கம் திரும்ப வேண்டும்?
1) சந்தை 2) பூங்கா 3) வங்கி 4) மிருகக்காட்சிசாலை

25. 
இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1) 14 2) 13
3) 16 4) 15

26, 27 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

26. 


27. 


இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்




## தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையை எழுதுக.
- 1,2 ஆகிய வினாக்களில் நான்கு அடைப்புகளில் மூன்றில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பிலுள்ள இரு உருக்களுக்குமிடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவு செய்க.

1. 



2. 


3. பின்வருவனவற்றில் சிறு குழந்தையின் உள்ளத்தினை விபரிக்கும் கூற்று எது?
1) பழிவாங்கும் தன்மை கொண்டது 2) கல் நெஞ்சம் கொண்டது.
3) அன்பு அற்றது. 4) கள்ளங்கபடமற்றது.

4. கணவனும் மனைவியும் இணைபிரியாது சந்தோசமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு உகந்த உவமானமாக அமைவது எது?
1) நகமும் சதையும் போல 2) ஓடும் புளியம்பழமும் போல
3) தாமரை இலைத் தண்ணீர் போல 4) அல்லும் பகலும் போல

5. "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறு தாக்கம் உண்டு" என்பதனை விளக்கும் கூற்றைத் தெரிவு செய்க.
1) சுவரில் எறியும் பந்து திரும்பி வருதல் 2) பழங்கள் கீழே விழுதல்
3) கப்பல் செல்லுதல் 4) காற்றில் பறத்தல்

**குறித்த ஒரு நகரில் கோயில், நூல்நிலையம், பூங்கா, மிருகக்காட்சிச்சாலை ஆகியன அமைந்துள்ள விதமும் அவற்றினை இணைக்கும் வீதிகளும் உருவில் காணப்படுகின்றன. அத்தகவல்களுக்கு ஏற்ப 6,7 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.**




6. எந்த ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தால் ஏனைய இடங்களிற்குக் குறைந்த அளவு தூரத்தில் செல்ல முடியும்.
1) பூங்கா 2) நூல் நிலையம் 3) கோயில் 4) மிருகக்காட்சிச்சாலை

7. ஒருவர் நூல் நிலையத்திலிருந்து பூங்காவிற்குச் சென்று பின்னர் அங்கிருந்து மிருகக்காட்சிசாலைக்கு சென்று பின்னர் அங்கிருந்து நூல்நிலையத்தினூடாக கோயிலுக்குச் சென்றால் அவர் பயணம் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?
1) 210 2) 1500 m 3) 1000 m 4) 2100 m


8. ஒரு மோட்டார் வண்டி 70 ஆவது கிலோ மீற்றர்க் கல்லில் இருந்து 80 ஆவது கிலோமீற்றர்க் கல்லைக் கடப்பதற்குப் 10 நிமிடங்கள் எடுத்தன. மோட்டார் வண்டி அதே கதியில் சென்றால் 140 ஆவது கிலோமீற்றர்க் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும்?
1) 60 நிமி 2) 55 நிமி 3) 25 நிமி 4) 70 நிமி

9. 4 kg கௌபியின் விலை = 2 kg சீனியின் விலை
4 kg சீனியின் விலை = 1 kg கடலையின் விலை
எனின், பின்வரும் அட்டவணைக்கேற்பக் கூடுதலான புணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?

| தர்சன் | அஜித் | முபாரக் | கிறிஸ்ரி |
|---|---|---|---|
| 6 kg கௌபி | 4 kg கௌபி | 2 kg கௌபி | 1 kg கௌபி |
| 2 kg சீனி | 3 kg சீனி | 2 kg சீனி | 3 kg சீனி |
| 1 kg கடலை | 1 kg கடலை | 2 kg கடலை | 2 kg கடலை |

1) தர்சன் 2) அஜித் 3) முபாரக் 4) கிறிஸ்ரி

10. 3 போத்தல் தேனின் நிறை = 6 தேங்காய் பால்மா பைக்கற்றுக்களின் நிறை
2 தேங்காய் பால்மா ரக்கற்றின் நிறை = 4 அரிசிமா பைக்கற்றின் நிறை
அவ்வாறாயின் எந்தப் பையில் குறைவான நிறை உள்ளது.



(1) (2) (3) (4)

11. ஒரு நகரத்தில் கோயில் பள்ளிவாசலிலிருந்து 70 m கிழக்கேயும், தேவாலயம் பள்ளிவாசலிலிருந்து 90 m வடக்கேயும், விகாரை தேவாலயத்திலிருந்து 70 m கிழக்கேயும் உள்ளன. இதற்கேற்ப விகாரை இருப்பது கோயிலிலிருந்து
1) 90 m வடக்கே 2) 70 m வடக்கே 3) 90 m கிழக்கே 4) 70 m கிழக்கே

12. காவியா விஜயின் மகனாவாள் ரமணன் விஜயின் அண்ணா ஆவார். ராஜி விஜயின் சகோதரி ஆவார். காவியன் ராஜியின் மகனாவார். காவியாவுக்குக் காவியன் என்ன உறவு முறை?
1) தம்பி 2) மைத்துனன் 3) அண்ணா 4) மாமா

**புகையிரத நிலையங்களிலிருந்து புகையிரதங்கள் புறப்பட உள்ள நேரம் பற்றிய விபரம் கீழ் காணப்படுகிறது.**

| புறப்பட்ட இடம் | புறப்படவுள்ள நேரம் மு. ப | பி. ப | குறிப்பு |
|---|---|---|---|
| வவுனியா | - | 2.30 | - |
| கண்டி | 6.30 | - | - |
| கொழும்பு | - | 1.00 | - |
| நுவரெலியா | 10.00 | - | இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| யாழ்ப்பாணம் | 11.45 | - | 2 மணித்தியாலம் |

13. புகையிரதங்கள் புறப்படவுள்ள இடங்களை ஒழுங்கு முறையில் தருக.
1) கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம், கொழும்பு 2) கண்டி கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா
3) கண்டி யாழ்ப்பாணம், கொழும்பு வவுனியா 4) கண்டி, நுவரெலியா, கொழும்பு, வவுனியா



14. ஒரு வகுப்பிலுள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்ததினங்கள் கீழே காணப்படுகின்றன.
லதா - 1998.01.24 சுதா - 1997.12.31
ராதா - 1998.11.20 சீதா - 1997.11.19
இதற்கேற்பச் சரியான கூற்று யாது?
1) சுதா லதாவிலும் இளையவள் 2) சீதா ராதாவிலும் மூத்தவள்
3) லதா ராதாவிலும் இளையவள் 4) சுதா சீதாவிலும் மூத்தவள்

**பின்வரும் தகவல்களைக் கொண்டு 15, 16 ஆகிய வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.**

| 1 kg சவ்வரிசி + 500g சீனி | 1 kg சவ்வரிசி + 250g சேமியா | 250 g சேமியா + 500g சீனி |
|---|---|---|
| ரூபாய் 380 | ரூபாய் 270 | ரூபாய் 250 |

15. 750 g சேமியா + 500 g சீனி இன் விலை யாது?
1) ரூ. 290 2) ரூ. 450 3) ரூ. 390 4) ரூ. 580

16. 3 kg சவ்வரிசி + 1 kg சேமியா+750 g சீனி இன் விலை யாது?
1) ரூ. 1150 2) ரூ. 1240 3) ரூ. 1140 4) ரூ. 1510

**2010ஆம்ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதற்கேற்ப 17, 18 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

17. 2010ஆம்ஆண்டு ஜனவரி மாதத்திலுள்ள திங்கட்கிழமைகளினதும் வெள்ளிக் கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே
1) 4.5 2) 5.4 3) 4.4 4) 5.5

18. 2010ஆம் ஆண்டில் உள்ள வெள்ளிக்கிழமைகள் எத்தனை?
1) 53 2) 49 3) 50 4) 52


**2010 ஆம் ஆண்டு 21 ஆம் நூற்றண்டின் முதல் தசாப்பத்திற்கு உரியதாகும். இதற்கேற்ப 19, 20 ஆகிய வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.**

19. அடுத்த ஒலிம்பிக் நடைபெறும் ஆண்டு
1) 21ஆம்நூற்றாண்டின் முதல் தசாப்தம். 2) 21ஆம்நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம.
3) 20ஆம்நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம். 4) 20ஆம்21ஆம்நூற்றாண்டின் முதல் தசாப்தம்.

20. 21 ஆம் 21ஆம்நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்திற்கு உரிய ஆண்டு.
1) 2045 2) 2055 3) 2145 4) 2155

21. ஒரு விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட இருபது பேர்களிடையே பதினைந்து பேர் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும், பத்துப்பேர் குளிர்பானம் அருந்திக் கொண்டும் இருக்கின்றனர். அவர்களனைவரும் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டோ, குளிர்பானத்தை அருந்திக் கொண்டோ இருக்கின்றனர். சிலர் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும் குளிர்பானத்தை அருந்திக் கொண்டும் இருக்கின்றனர். அவ்வாறு சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும் குளிர்பானத்தை அருந்திக்கொண்டும் இருப்போர் எத்தனை பேர்?
1) ஏழு 2) ஐந்து 3) மூன்று 4) இரண்டு

22. ஒரு சதுரமுகியின் ஆறு பக்கங்களிலும் 1, 2, 3, 4, 5, 6 என்னும் இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள விதம் பின்வரும் உருக்களில் காணப்படுகிறது.




இறுதி உருவில் மேல் முகத்தில் இலக்கம் காணப்படும் விதம் யாது?

3 4 5 6

# யாழில் டெங்கு ஒழிப்புக் கட்டுப்பாட்டு வாரம் அனைவரது பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டது

## வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவிப்பு

செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதிவரையான காலப்பகுதிவரை நடந்து முடிந்த தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வாரமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்துத் தரப்பினரினதும் முழுமையான பங்களிப்புடன் நடைபெற்றுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் மட்டுமன்றி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முப்படையினரும் இணைந்து நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாட்டிற்கு தமது பங்களிப்புக்களை வழங்கியுள்ளார்கள். இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களது 5315 மனித வளங்களும் முப்படைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களது 1676 மனித வளங்களுமாக மொத்தமாக 6991 மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 542 பாடசாலைகளின் வளவுகள் பரிசோதனை செய்யப்பட்டு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான 210 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 23 இடங்களில் நுளம்புக்குடம்பிகளும் இனம்காணப்பட்டன. உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 35 பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலை வளவுகளைச் சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 666 தனியார்,உயர்கல்வி நிறுவனங்களின் வளவுகளும் பரிசோதனை செய்யப்பட்டு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான 158 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இவற்றில் 3 இடங்களில் நுளம்புக் குடம்பிகளும் இனம்காணப்பட்டு அவை அனைத்தும் உடனடியாகவே அழிக்கப்பட்டதுடன் 10 நிறுவனங்களைச் சேர்ந்த உரிமையாளர்களுக்கு வளவுகளை சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 851 அரச நிறுவனங்களின் வளவுகள் பரிசோதனை செய்யப்பட்டு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான 239 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 34 இடங்களில் நுளம்புக்குடம்பிகளும் இனம்காணப்பட்டன.

உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 19 அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு வளவுகளைச் சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டதுடன் 3 அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 514 தனியார் நிறுவனங்களின் வளவுகள் பரிசோதனை செய்யப்பட்டு 98 நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 7 இடங்களில் நுளம்புக்குடம்பிகளும் இனம் காணப்பட்டன. உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 14 தனியார் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு வளவுகளைச் சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டதுடன் 2 தனியார் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 2517 தொழிற்சாலைகளின் வளவுகள் பரிசோதனை செய்யப்பட்டு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான 686 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 102 இடங்களில் நுளம்புக்குடம்பிகளும் இனம் காணப்பட்டன. உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 39 தொழிற்காலைகளின் உரிமையாளர்களுக்கு வளவுகளைச் சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டதுடன் 7 தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 3507 பொது இடங்கள், கைவிடப்பட்ட காணிகள் பரிசோதனை செய்யப்பட்டு 1335 நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 53 இடங்களில் நுளம்புக் குடம்பிகளும் இனம்காணப்பட்டன.

உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 125 கைவிடப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு வளவுகளைச் சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டதுடன் கைவிடப்பட்ட 10 காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 54716 வீட்டுக் குடியிருப்புக்களின் வளவுகளும், கோயில்களின் வளவுகளும் பரிசோதனை செய்யப்பட்டு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான 9002 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 334 இடங்களில் நுளம்புக் குடம்பிகளும் இனங்காணப்பட்டன.

உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 166 வீட்டு உரிமையாளர்களுக்கு வளவுகளை சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டதுடன் 36 வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் கட்டுமானப் பணிகள் இடம்பெறும் 941 வளவுகளும் பரிசோதனை செய்யப்பட்டு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான 257 இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டதுடன் 18 இடங்களில் நுளம்புக் குடம்பிகளும் இனம் காணப்பட்டன.

உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் கட்டுமானப் பணிகள் இடம்பெறும் 18 வளவுகளின் உரிமையாளர்களுக்கு வளவுகளை சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டதுடன் 9 கட்டுமானப் பணிகள் இடம்பெறும் வளவுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் மொத்தமாக 65960 வளவுகள் பரிசோதனை செய்யப்பட்டு 12374 நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இட்ங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் 603 இடங்களில் நுளம்புக்குடம்பிகளும் இனம் காணப்பட்டன.

உடனடியாகவே இவ் இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 448 வளவுகளின் உரிமையாளர்களுக்கு வளவுகளைச் சுத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினமே வழங்கப்பட்டதுடன் 71 வளவுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.

# பெற்றோர்களின் செயற்பாடு விசனமடையும் பொதுமக்கள்

(சுன்னாகம்)

யாழ். நகரப் பகுதி மற்றும் வலிகாமம் பகுதிகளில் பாடசாலை நாட்களில் மாணவர்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்செல்லும் பெற்றோர்களிலுல் சிலர் தமது பிள்ளைகளுக்கு தலைக்கவசம் அணியாமல் ஏற்றிச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஆரம்பப் பிரிவு மாணவர்களை ஏற்றிச் செல்லும் பெற்றோர்களில் சிலரே இவ்வாறு தமது பிள்ளைகளை தலைக்கவசம் அணியாது ஏற்றிச் செல்வதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு செல்லும் சந்தர்ப்பங்களில் எதிர்பாராமல் விபத்துக்கள் நேர்ந்தால் பாதிப்பு அவர்களுக்கே என்பதை பெற்றோர்கள் சிந்திக்க வேண்டும் எனவும், நேரத்தைக் காரணம் காட்டி பெற்றோர்கள் விடும் இத்தகைய தவறுகள் தவிர்க்கப் படவேண்டும் எனவும் தமது பிள்ளைகளின் பாதுகாப்பில் பெற்றோர்களே அக்கறை காட்ட வேண்டும் எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (66)

# ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய நவராத்திரி விரத பூசை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி - நாகேஸ்வரம், ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்த்தானத்தில் நாளை புதன்கிழமை நவராத்திரி விரதங்கள் ஆரம்பமாகும்.

முதல் மூன்று தினங்கள் மலைமகளான துர்க்கைக்கும், அடுத்த மூன்று தினங்கள் அலைமகள் லஷ்சுமிக்கும், இறுதி மூன்றுநாட்களும் கலைமகள் சரஸ்வதிக்கும் பக்தி பூர்வமாகப் பூசைகள் நிறைவேற்றப்படவுள்ளன.

தினமும் மாலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதணைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். பத்தாம் நாள் விஜயதசமி பூசை நடைபெறும். புதிய மாணவ, மாணவிகளும் வித்தியாரம் தொடக்கி வைக்கப்படும்.

அதேவேளை அன்றையதினம் வெள்ளிக்கிமை மானம்பூ எனப்படும் வாழைவெட்டு நிகழ்வும் ஆலய முன்றலில் இடம்பெறும்.(68)

# சிறார்களின் எதிர்கால கல்விக்கு பெற்றோர்களின் பங்கு முக்கியமானது

## காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



முன்பள்ளி சிறார்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைக்கும் அவர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாக திகழ்வதற்கும் பெற்றோர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் என காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் காரைநகர் பிரதேச அமைப்பாளருமான கண்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மருதபுரம் மருதமலை முள்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா உபதலைவர் பா.சுரேஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் கல்வி என்பது பெரும் முக்கியபங்கினை வகிக்கின்றது கல்வி மட்டுமல்லாது விளையாட்டும் முக்கியதேவைகளில் ஒன்றாகும். சிறுவயதில் இடப்படும் கல்வியானது ஒரு கட்டடம் தலைநிமிர்து நிற்பதற்கு அத்திபாரம் எவ்வளவு பலமானதாக காணப்படுகின்றதோ அதேபோன்றுதான் முன்பள்ளிச் சிறார்களின் எதிர்காலத்திற்கு முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

இதற்கு ஆசிரியர்கள் மட்டுமலலாது பெற்றோர்களும் ஒத்துழைப்பினை நல்கவேண்டும். ஒரு காலகட்டத்தினை எடுத்து கொண்டால் இக்கிராமமானது மிகவும் பின்தங்கிய கிராமமாகக் காணப்பட்டது. எமது அயராத உழைப்பினால் இன்றுதலை தூக்கி நிக்கின்றது.

இன்னும் இக்கிராமம் வளர்ச்சியை காணவேண்டும் இதற்குசிறார்களின எதிர்கால தொலை நோககத்தினை கருத்திற் கொண்டு ஒவ்வொரு பெற்றோர்களும் கவனம் எடுக்கவேண்டும்.

மீண்டும் பழையநிலைக்கு இக்கிராமத்தினை தள்ளிவிடாது மற்றோரை திரும்பிப்பார்க்க வைக்க வேண்டும். ஏழைகளின் சிரிப்பில்தான் இறைவன் வாழ்கின்றான் எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட்டு மாணவர்களது எதிர்காலத்துக்காக அயராது பாடுபடவேண்டும். கணடிப்பாக ஒளிமயமான எதிர்காலத்தினை காணலாம். எனசிறப்புரை வழங்கி தொடர்ந்து மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி நிகழ்வினை சிறப்பித்தார்.

# இந்திய எல்லையில் இராணுவ ஊடுருவல்

# இந்தியா - சீனா பேச்சுவார்த்தை ரத்து



இந்திய எல்லையில் சீன இராணுவம் ஊடுருவியுள்ள நிலையில், சீன செய்தியாளர்கள் டில்லி வருவதற்கு வழங்கப்பட்ட அனுமதியை மத்திய அரசு ரத்து செய்துள்ளதுடன் டில்லியில் நாளை நடைபெறவிருந்த இந்திய - சீன செய்தியாளர்கள் பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீன அதிபர் ஜி ஜின்பிங் அண்மையில் மூன்று நாள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்திருந்த போது இருதரப்புக்கும் இடையே ரயில்வே உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பாக ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருந்தன. இதன்போது எல்லைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீன அதிபர் தெரிவித்திருந்தார்.

அதே சமயம் இந்திய எல்லையில் உள்ள சுமர் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவியது. அங்கு வீதி அமைப்பதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருவதுடன் இந்திய இராணுவத்தின் எதிர்ப்பை அடுத்து அங்கிருந்து சீன இராணுவ வீரர்கள் வெளியேறினர். ஆனால், மீண்டும் கடந்த சனிக்கிழமை சுமர் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவியுள்ளது. அவர்களை வெளியேறுமாறு இந்திய இராணுவம் வலியுறுத்தி வருகிறது. எல்லையில் வீதி அமைக்கும் பணிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் இராணுவ வீரர்களை சீன அரசு நிறுத்திவைத்துள்ளது.

இந்நிலையில், நாளை டில்லியில் இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்த செய்தியாளர்கள் சந்தித்துப் பேசுவதற்கான கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பங்கேற்க வரும் சீனாவின் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி செய்தி சேனல்களின் ஆசிரியர்களுக்கு இந்திய அரசு ஏற்கெனவே அனுமதி அளித்திருந்தது. ஆனால், திடீரென அந்த அனுமதியை இந்திய அரசு நேற்று முன்தினம் இரத்துச் செய்துள்ளது.

சீன இராணுவத்தின் ஊடுருவல் நடைபெற்றிருக்கும் வேளையில் அந்நாட்டைச் சேர்ந்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சரியாக இருக்காது என்பதால் இந்த நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மீண்டும்ஆட்சியைப் பிடித்த ஜான்கீக்கு மோடி வாழ்த்து



நியூசிலாந்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியான தேசியக் கட்சி மீண்டும வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

49 சதவீத வாக்குகளை பெற்ற ஆளுங்கட்சி முன்னிலை பெற்று மீண்டும் ஆட்சியைப்பிடித்துள்ளது. தங்கள் கூட்டணியில் உள்ள மூன்று சிறிய கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்க ஜான் கீ முடிவெடுத்துள்ளதுடன் மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ள ஜான் கீக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் மோடி நேற்று தெரிவித்தார்.

# 2 இலட்சம் டொலருக்கு விற்பனை கென்னடியின் கடிதங்கள்



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப். கென்னடியின் கடிதங்கள் இரண்டு இலட்சம் டொலருக்கு ஏலத்தின் மூலம் விற்பனையாகியுள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ஜோன் எப். கென்னடி, 1943 ஆம் ஆண்டு அமெரிக்க கடற்படையில் பணியாற்றிய போது, தனது போர்க் கப்பலில் உடன் பணியாற்றிவந்த அமெரிக்க வீரர் ஹரோல்ட் மார்னியின் மரணத்ததுக்கு இரங்கல் தெரிவித்து அவரது குடும்பத்தாருக்கு சில கடிதங்களை எழுதியிருந்தார்.

இந்தக்கடிதங்களை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ள ஒரு ஏல நிறுவனம் சமீபத்தில் ஏலத்தில் விற்றபோது அவற்றை 2 இலட்சம் டொலர் விலை கொடுத்து ஒருவர் வாங்கியுள்ளார்.

உலகச் செய்திகள்

# லக்னோ விபத்தில் 8 பேர் உயிரிழப்பு



லக்னோ பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநில தலைநகர் லக்னோ அருகேயுள்ள பகுதியில் உள்ள ஒரு பட்டாசுத் தொழிற்சாலையில் கடந்த சனிக்கிழமை பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

இந்த அனர்த்தத்தில் குறித்த தொழிற்சாலை முற்றாக இடிந்து தரைமட்டமானதுடன் விபத்தில் 5தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அத்துடன் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 3 தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பிலாவல் பூட்டோவின் கொடும்பாவி எரிப்பு



காஷ்மீர் விவகாரத்தில் பிலாவல் வெளியிட்டிருக்கும் சர்ச்சைக்குரிய கருத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அவரது கொடும்பாவியை நாங்கள் தீயிட்டு கொளுத்துகிறோம் என்று அகில பாரத வித்யாதி பரிஷத் கட்சியினர் தெரிவித்தனர்.

பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் மகனான பிலாவல் பூட்டோ, பஞ்சாப் மாகாணத்தில் உள்ள முல்தான் நகரில் பாக்கிஸ்தான் மக்கள் கட்சி தொணடர்கள் இடையே கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது 'மற்ற மாகாணங்களைப் போல் காஷ்மீர் மாகாணமும் பாக்கிஸ்தானுக்கு சொந்தமானதுதான். எனவே அதில் ஒரு அங்குலத்தைக் கூட யாருக்கும் விட்டுத்தர முடியாது. காஷ்மீரை முழுமையாக நான் மீட்பேன்' என உணர்ச்சி பொங்க தெரிவித்தார்.

பிலாவல் பூட்டோ இவ்வாறு பேசிய போது பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர்கள் யூசுப் ராஸா கிலானி மற்றும் ராஜா பெர்வய்ஸ் அஷ்ரப் ஆகியோர் அதே மேடையில் மௌனமாக அமர்ந்திருந்தது இந்திய மக்களுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

பா.ஜ.க., காங்கிரஸ் மற்றும் தாய்நாட்டின் மீது தேசப்பற்று கொண்ட அனைவரும் பிலாவலின் கருத்துக்கு கடும் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்து வந்ததுடன் அகில பாரத வித்யாதி பரிஷத் கட்சியினர் மத்தியப் பிரதேசம் மாநில தலைநகர் போபாலில் பிலாவல் பூட்டோவின் கொடும்பாவியை தீவைத்து எரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# எகிப்து வெளியுறவுத்துறை அமைச்சின் அலுவலக வாயிலில் குண்டு வெடிப்பு



எகிப்து நாட்டின் தலைநகரமான கெய்ரோவில் உள்ள வெளியுறவுத் துறை அமைச்சு அலுவலகத்தின் வாயிலில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 3 பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

பலியானவர்தளில் ஒருவர் முன்னாள் அதிபர் முஹம்மது மோர்சிக்கு எதிரான சிறை உடைப்பு மற்றும் கலவர வழக்கில் அரசு தரப்பின் முக்கிய சாட்சியாக சேர்க்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றிருக்கும் அஜ்னாட் மிஸ்ர் (எகிப்தின் போராளிகள்) இயக்கம், இந்த புதிய தாக்குதலின் மூலம் எங்களால் எந்த இடத்தின் மீதும் தாக்குதல் நடத்த முடியும் என்பதுடன் முஸ்லிம்களுக்கு அரசு அளித்த அதே சுவையை கொடூர குணம் கொண்ட அரசு அதிகாரிகளையும் சுவைக்க வைக்க எங்களால் முடியும் என்பதை நிருபித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் எமது தாக்குதல்களை நிறுத்திக் கொள்ளமாட்டோம் என்றும் அறிவித்துள்ளது.

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் ஈரானுக்கு முக்கிய பங்கு

## அமெரிக்கா பகிரங்க அறிவிப்பு




ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் ஈரானுக்கும் முக்கிய பங்கு உள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சிரியா, ஈராக்கில் கணிசமான பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளதுடன் இரு நாடுகளின் அரசுகளால் அந்த அமைப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஈராக் தலைநகர் பாக்தாத்தை நோக்கி ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் முன்னேறிய நிலையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் இவர்களுக்கு எதிராக அண்மையில் போராட்டத்தில் இறங்கியுள்ளன.

அதுமட்டுமின்றி வளைகுடா பகுதியைச் சேர்ந்த சுமார் 40 நாடுகளை ஒருங்கிணைக்கும் முயற்சியிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக அமெரிக்காவின் பரம எதிரியான ஈரானுடனும் மறைமுகமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து ஈரானின் மூத்த தலைவர் அயத்துல்லா அலி கொமேனி அண்மையில் நிருபர்களிடம் பேசியபோது, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் தங்களுடன் இணையுமாறு அமெரிக்கா கேட்டுக்கொண்டது, அதனை நிராகரித்து விட்டோம் என்று தெரிவித்தார்.

# சங்கத்தானை சப்பச்சிமாவடி மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சாவகச்சேரி சங்கத்தானை சப்பச்சி மாவடி வீதியில் வாழும் மக்கள் புகையிரத பாதை கடவை தொடர்பில் விளக்கமளித்துள்ளனர்..

குறித்த பகுதிக்கு நேற்று அமைச்சர் விஜயம் செய்த போதே இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதன்பிரகாரம் சங்கத்தானை சப்பச்சி மாவடி வீதியில் வாழும் மக்கள் புகையிரதப் பாதை கடவை நிர்மாணிப்பின் போது தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளை அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

இதற்கமைவாக குறித்த விடயம் தொடர்பில் தாம் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

# மாங்குளம் அஞ்சல் அலுவலக புதிய கட்டடம் திறப்பு

மாங்குளம் அஞ்சல் அலுவலக புதிய கட்டடம் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இப் புதிய அஞ்சலகக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இதனை அஞ்சல் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரணதுங்கவின் அழைப்பின் பேரில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சவுதி நாட்டு பிரதிநிதிகள், ஜனாதிபதியின் இணைப்பாளர் சிவநாதன் கிசோர், வடமாகாண ஆளுநரின் இணைப்பாளர் ஐ.எஸ்.எம்.முகைதீன், மாங்குளம் பிரதேச இராணுவ பொறுப்பதிகாரி, வடமாகாண அஞ்சல் திணைக்கள பணிப்பாளர், அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாங்குளம் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (70)

# தொண்டு நிறுவனங்களை ஒடுக்க முயற்சிக்கிறது அரசு

## ட்ரான்பெரன்சி தலைவர் குற்றச்சாட்டு

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஒடுக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ட்ரான்பெரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் தலைவர் ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.

புதிய சட்டங்களை அமுல்படுத்தி தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளை முடக்கும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அல்ஜசீரா ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊழல் மோசடிகளுக்கு எதிரான 13 ஆவது பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாகவும், இதனால் சர்வதேச சட்டங்களுக்கு இலங்கை மதிப்பளிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அரசியல் சாசனத்திற்கு விரோதமான முறையில் செயற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட திட்டங்களுக்கு அமைய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செயற்படுவதனை உறுதி செய்ய நாட்டின் தற்போதைய சட்டங்கள் போதுமானது என அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பணியாளர்கள், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் ஆண்டு தோறும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சுயாதீனமான முறையில் செயற்படுவதனை தடுக்கும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறான முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# இலங்கை முஸ்லிம்களை தனிமைப்படுத்தி தீவிரவாத வலைக்குள் இழுக்க சதி

## ஐ.எஸ்.ஐ. இன் திட்டம் அம்பலம்

இலங்கையிலுள்ள முஸ்லிம்களை இன மோதல்கள் மூலம் தனிமைப்படுத்தி, அவர்களூடாக தென்னிந்தியாவை உளவுபார்த்து தாக்குதல்களை நடத்த பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு அமைப்பு வியூகம் வகுத்துள்ளதாக தமிழ்நாட்டில் கைதுசெய்யப்பட்ட இலங்கைத் தமிழரான அருண் செல்வராசாவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையில் இன மோதல்களை உருவாக்கி, முஸ்லிம்களைத் தனிமைப்படுத்தி தமது வலையில் விழ வைப்பதன் ஊடாக அவர்களை உளவாளிகளாகப் பயன்படுத்தவே மேற்படி தீவிரவாத அமைப்பு முயற்சித்து வந்ததாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக உதவியுடன் தென்னிந்தியாவை உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் அருண் செல்வராசா என்பவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டார். அத்துடன், சாகிர் ஹுசேன் என்ற பாகிஸ்தான் உளவாளியும் கைது செய்யப்பட்டார்.

இந்த இருவரிடமும் தேசிய புலனாய்வு மைய அதிகாரிகள் நடத்திய விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இலங்கையில் உள்ள தீவிர பௌத்த இயக்கமான பொது பல சேனாவுக்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. மறைமுகமாக உதவி செய்கிறது. பொதுபலசேனா மூலமாக இலங்கையிலுள்ள முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்த வைப்பது ஐ.எஸ்.ஐ.இன் திட்டம்.

அப்படி முஸ்லிம்கள் தாக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படும் போது தீவிரவாதத்தை நோக்கி தள்ளப்பட வேண்டும் என்பது ஐ.எஸ்.ஐ.இன் நோக்கம். இப்படி தங்களிடம் வந்து சேரும் இலங்கையர்களை வைத்து தென்னிந்தியாவை உளவு பார்த்து, தாக்குதலுக்கு வியூகம் வகுப்பது என்பதுதான் அவ்வமைப்பின் திட்டம்.

பாகிஸ்தான் தூதரக அதிகாரியான அமிர் சுபைர் சித்திக் என்பவர் தலைமையில்தான் இந்த சதித்திட்டம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில், 15 முதல் 50 வரையான உளவாளிகளை சித்திக் உருவாக்கியுள்ளார். இவர்களில் சிலர் தென்னிந்தியாவுக்குள் தாக்குதல் நடத்துவதற்காக வேவு பார்க்க அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர்.

இந்தியாவிலுள்ள இஸ்ரேலிய தூதரகங்கள், தேசிய கொமாண்டோ படைத் தலைமையகங்கள் தான் பாகிஸ்தானின் இலக்கு என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியப்...

நாடுகள் சபையின் 69 ஆவது பொதுச் சபை கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் பொருட்டு நேற்று முன்தினம் மாலை 6.40 மணியளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தூதுக்குழுவினர் அமெரிக்கா நோக்கி புறப்பட்டுச் சென்றனர்.

நியூயோர்க்கில் இன்று ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் சபையின் 69 ஆவது பொதுச் சபை கூட்டத் தொடரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளைய தினம் உரையாற்றவுள்ளதாகவும் மொஹான் சமரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க விஜயத்தின் போது ஜனாதிபதி மேலும் பல நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபை மாநாட்டில் உரையாற்றிய பின்னர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பவுள்ளதாக. ஜனாதிபதியின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் 69 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்வரும் 27 ஆம் திகதி நியூயோர்க்கில் வைத்துச் சந்திப்பார் என இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

## சுயலாப...

தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் நீண்டகாலத் தேவையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பூர்த்தி செய்திருக்கின்றார். அந்தவகையில் ஜனாதிபதிக்கும், இந்திய அரசுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நான் இந்தியா சென்றிருந்த போது பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. அவற்றில் வடபகுதிக்கான புகையிரதப் பாதையின் புனரமைப்பும் ஒன்றாகும். அதுமட்டுமன்றி வீட்டுத்திட்டம், மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு செயற்றிட்டங்களுக்கும் இந்தியத் தரப்பால் இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இங்கிருக்கக்கூடிய சுயலாப அரசியல்வாதிகள் தமது சுயலாபத்திற்காகவும் மக்களை திசைதிருப்புவதற்காகவும் வடக்கிற்கு புகையிரத சேவை தேவையில்லையென கூறியிருந்தார்கள்.

ஆனாலும் இன்று அவர்களது நோக்கம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் புகையிரத சேவை யாழ்ப்பாணம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது எமது மக்களுக்கு மிகவும் தேவையானது என்பதுடன் இப்பகுதியின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்கும் முக்கியமானதாக அமையுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், புகையிரத சேவை மேலதிகாரி ஆரியரட்ன ஆகியோரும் ஊடகங்களுக்கு தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

## தனிநாடு...

சுய நிர்ணய உரிமைகளை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கை மீள ஒருங்கிணைத்து அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் பேசும் முஸ்லிம் மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டி முறைமையிலான ஆட்சி முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறைமையிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு எனவும், அதனை பல தடவைகள் பகிரங்கமாக அறிவித்துள்ளதாகவும் சத்தியக் கடதாசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை...

இலங்கைக்கு விஜயம் செய்த தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோச ஜனாதிபதி உட்பட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தென்னாபிரிக்காவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தமது நாட்டின் அனுபவத்தை பகிர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழிற்கான..

வரையிலான ரயில் மார்க்கத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியதை அடுத்து நேற்று பரீட்சார்த்த ரயில் சேவைகள் நடாத்தப்பட்டன.

நேற்றுக் காலை 10 மணிக்கு பளையிலிருந்து புறப்பட்ட பரீட்சார்த்த ரயில் 10.15 மணிக்கு யாழ்ப்பாண ரயில் நிலையத்தை அடைந்ததாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

## பரீட்சார்த்த...

ஆரவாரத்துடன் வழியனுப்பி வைத்தனர்.

வீதியின் இருமருங்கிலும் கூடியிருந்த மக்களும் கைஅசைத்து மகிழ்ச்சி தெரிவித்ததுடன் தமது கைத்தொலைபேசிகளின் ஊடாக புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டதை காணமுடிந்தது.

பளையிலிருந்து ஆரம்பித்த இப்புகையிரதம் எழுதுமட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி, நாவற்குழி ஊடாக யாழ். பிரதான நிலையத்தை வந்தடைந்தது.

இதனிடையே கொடிகாமம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புகையிரத தரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகளையும் அமைச்சர் மற்றும் ஆளுநர் உள்ளிட்ட அதிதிகள் பார்வையிட்டனர்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன்,. இந்தியாவின் ஜகோன் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாள்ர் எஸ்.எல்.குப்தா, பளை - காங்கேசன்துறைக்கான திட்டப்பணிப்பாளரும், பொறியியலாளருமான பிரேம் குமார், புகையிரத சேவை மேலதிகாரி ஆரியரட்ன உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர். (25,29)

# ஜனாதிபதி தேர்தலை நடாத்த அவசரம் காட்டாது அரசாங்கம்

## அமைச்சர் சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடாத்துவதற்கான அறிவிப்பை அரசாங்கம் விடுக்கமாட்டாதென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த எமக்கு இன்னும் இரண்டு வருட கால அவகாசம் உள்ளது. எனவே அவசரப்பட்டு நாம் தேர்தலுக்கு செல்லமாட்டோம். சரியான நேரத்தில் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவோம். எனவே முன்கூட்டியே தேர்தல் நடைபெறுமென நான் நினைக்கவில்லை.

எதிர்க்கட்சிகள் எப்பொழுதும் அரசாங்கத்தை அச்சுறுத்து பவையாக இருக்கமாட்டாது. ஏனெனில் இந்த நாட்டில் வாழும் மக்கள் அரசாங்கத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். எனவே அரசாங்கம் மிகப் பலம்வாய்ந்த நிலையில் உள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர்,

அரசாங்கம் தேர்தலின் இறுதி முடிவுகள் குறித்தே அக்கறை கொள்ளும். எதிர்க்கட்சிகள் கூறுவதைப்போல புள்ளிவிபரத்தை கணக்கில் எடுக்கமாட்டாது. நாங்கள் தற்போது தெளிவான வெற்றியொன்றை பதிவுசெய்துள்ளோம்.

தமது தோல்வியை மறைப்பதற்கு எதிர்க்கட்சிகள் புள்ளிவிபரத்தை காட்டுகின்றன. ஆனால் அதற்குள் எதுவுமில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 3 பிள்ளைகளின் தாய் கடலில் மூழ்கி உயிரிழப்பு

(தலைமன்னார்)

மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தலைமன்னார் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, தலைமன்னார் பொலிஸ் பிரிவிலுள்ள பருத்திப் பண்ணைக் கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருவரை நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணி முதல் காணவில்லையென அவர்களின் உறவினர்கள் சகல இடங்களிலும் தேடினர். பின்னர் நேற்று முன்தினமிரவு 7.00 மணியளவில் அவரது சடலம் தலைமன்னார் தென்கடல் பகுதியான பருத்திப்பண்ணைக் கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் கண்டுப்பிடிக்கப்பட்டது. மூன்று பிள்ளைகளின் தாயான பர் வோன் ஞானமாணிக்கம் (வயது-44) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தப் பெண் கடந்த சில மாதங்களாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என ஆரம்ப விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. சடலம் தலைமன்னார் பொலிஸாரால் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி தே.பி.சிந்தாத்துரை மரண விசாரணையை மேற்கொண்டார். பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டைவிட்டு வெளியேற 7 இந்தியர்களுக்கு உத்தரவு

(அம்பாறை)

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து அம்பாறை, கல்முனை பிரதேசத்தில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியர்கள் 7 பேரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு கல்முனை நீதவான் நீதிமன்ற் நீதவான் அந்தோனி ஜூட்சன் நேற்று உத்தரவிட்டார்.

இதேவேளை, அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட புடவைகளையும் அரசுடமையாக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

கல்முனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்படி 7 பேரும் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்தனர்.

இவர்கள், வீடுவீடாகச் சென்று புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட நிலையிலேயே கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி அந்தோனி ஜூட்சன் முன்னிலையில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதவான் மேற்கண்ட உத்தரவினைப் பிறப்பித்தார்.

# இலங்கை வைத்தியர்கள் மாலைதீவிற்கு செல்வர்



(கொழும்பு)

மாலைதீவு வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்காக இலங்கையில் இருந்து விஷேட வைத்தியர்களை அனுப்பும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் அப்துல் கை[illegible] சுகாதார அமைச்சரிடம் இது தொடர்பில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இவ்விடயம் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் கலந்தாலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# ஜனநாயகக் கட்சியின் வாக்குகளை தட்டிப் பறித்தது அரசாங்கம்

## வெதும்புகிறார் சரத் பொன்சேகா

(கொழும்பு)

ஊவா மாகாணசபைத் தேர்தலின் போது, ஜனநாயகக் கட்சிக்கு கிடைத்திருந்த 45 ஆயிரம் வாக்குகளை அரசாங்கம் கொள்ளையிட்டது. இது தொடர்பில், இன்றைய தினம் தேர்தல் ஆணையாளரிடம் முறையிடவுள்தாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனநாயகக் கட்சிக்கு கிடைக்கவிருந்த ஆசனத்தை சூழ்ச்சியின் மூலம் இல்லாது செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதாக தேர்தலுக்கு முன்னரே ஜனாதிபதி தரப்பிலிருந்து எனக்கு தகவல் கிடைத்தது என்று பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

# தோல்வியில் முடிவடையும் இளவயது திருமணங்கள்

## ஆய்வில் வெளிப்படும் உண்மை

20 வயது முதல் 25 வயதுக் குட்பட்டவர்களுக்கு இடையில் நடைபெறும் திருமணங்களில் 60 வீதமான திருமணங்கள் தோல்வியில் முடிவடைவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

திருமணங்கள் தொடர்பான ஆய்வொன்றில் மூலம் இது தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலனறுவை புலஸ்புர பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

வாழ்க்கை தொடர்பான பக்குவம் இல்லாத காரணத்தினாலேயே இந்தத் திருமணங்கள் இடையில் முறிந்து போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# விசாரணை



இலங்கை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என். ஜே.புஷ்பகுமார உள்ளிட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஐவர் மீது நேற்று ம[illegible] உரிமை ஆணைக்குழுவில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சை பொருளியல் வினாத்தாள் சர்ச்சை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமையவே இந்த விளக் கம் கோரல் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.


# யாழ்.மாநகரசபை அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டத்தின் கீழ் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட சகல ஆதன உரிமையாளர்களுக்கும், குடியிருப்பாளர்களுக்கும் ஏற்கனவே டெங்கு வாரத்தை முன்னிட்டு (10.09.2014 - 16.09.2014) வழங்கப்பட்ட அறிவித்தல்க ளுக்கு மேலதிகமாக இவ்வறிவித்தல் வழங்கப்படுகிறது.

தங்களது வளவுகளில் காணப்படும் நுளம்பு பெருகுவதற்கு சாதகமாகவுள்ள சகல நிலைமைகளையும் சீர்செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அவ்வாறு சீர்செய்யத்தவறும் பட்சத்தில் மேற்படி சட்டத்தின் 5(1) இன் படி, மாநகரசபை ஊழியர்களால் வளவானது சீர்செய்யப்படுமிடத்து அதற்கான செலவானது உரிய ஆதன உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அறவிடப்படும்.

இவ்வறிவித்தலை இறுதி அறிவித்தலாக ஏற்று மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுடன் ஒத்துழைப்பு வழங்கத்தவறும் பட்சத்தில் மேற்படி சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C/3448)


# வெளிநாட்டவருக்கு விசா; புதிய பாதுகாப்புத் திட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் போது தற்போது பாவனையில் உள்ள உத்தியோக பூர்வ முத்திரைக்கு பதிலாக புதிய பாதுகாப்பு ஸ்டிக்கரை பயன்படுத்துவதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்பொருட்டு அவ்வாறான ஸ்டிக்கர்களை அச்சிடுவதற்கு, தற்போது அரசாங்கம் அச்சக கூட்டுத்தாபனத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அச்சகத்தின் முத்திராதிபதி லித் டி சில்வா தெரிவித்தார்.

இந்த புதிய நடைமுறையின் கீழ் வெளிநாட்டவர்களுக்கு முற்னேற்றகரமானதும் முழுமையான பாதுகாப்பானதுமான விசாவை பெற்றுக்கொடுக்க முடியும் என குடிவரவு குடியகல்வு திணைக்கள பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, 4ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மன்னார் வீதியில் உள்ள 4ஆம் கட்டைப் பிரதேசத்தில் மோட்டர் சைக்கிள் ஒன்றும் தனியார் பயணிகள் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வவுனியா, செட்டிகுளம், வாரிக்குட்டியூர் பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.கலைச்செல்வன் (வயது-38) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்தையடுத்து தனியார் பேருந்து சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் பேருந்து வவுனியா பொலிஸில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.